கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–15, இதழ் – 11	ஐப்பசித் திங்கள்	விலை ரூ. 25/–	ஆண்டு சந்தா ரூ. 300/–	தமிழ் மாத இதழ்
Volume - 15, Issue - 11	October 2024	Price Rs. 25/-	Annual Subscription Rs. 300/-	Tamil Monthly

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு
திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஒரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

CHENNAI KARKATHAR ASSOCIATION

Choolaimedu, Chennai - 600 094.

LADIES HOSTEL

- A/c. & Non A/c. Single Cot, Big Size Room
- Free Wi-Fi
- Free Washing Machine
- Free Aquaguard Water
- Two Wheeler Parking available
- Camera Facilities Available Inside & outside Area
- Security Persons available
- Three Times food, Breakfast, Lunch & Dinner
- Milk available Morning only
- 24 Hours warden available
- Catering Available
- Food Timings : Morning 7.30 a.m. to 9.30 a.m.
  Lunch : 12.00 p.m. to 2.30 p.m.
  Dinner : 7.30 p.m. to 9.00 p.m.

No. 64, Sowrashtra Nagar 10th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Cell : 94454 82798, 99943 26976
E-mail : kaveri9941@gmail.com

ஸ்ரீ அங்காளம்மன் துணை

சஷ்டி யப்த பூர்த்தி விழா

எங்கள் அன்பு பெற்றோரும்,
மயிலாடுதுறை மாவட்டம் கடக்கம் கிராமத்தை சேர்ந்த
தெய்வத்திருவாளர்கள் கோத்திரம் உத்திரகுட **பரஞ்ஜோதி பிள்ளை-ராஜம் அம்மாள்**
ஆகியோரின் மகன்
திரு. **ப.முத்துக்குமார்** அவர்களுக்கும்
மயிலாடுதுறை மாவட்டம் எ.சாத்தனூர் கிராமத்தை சேர்ந்த
தெய்வத்திருவாளர்கள் தீனுட **C.கோவிந்தராஜன் பிள்ளை-இளஞ்சியம் அம்மாள்**
ஆகியோரின் மகள் திருமதி **மு.சித்ரா** அவர்களுக்கும்

25.07.2024 வியாழக்கிழமை பூரட்டாதி நட்சத்திரம் கூடிய நன்னாளில்
திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற
சஷ்டி யப்த பூர்த்தி விழாவில் கலந்து கொண்டு ஆசிவழங்கி
ஆசிபெற்று சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை
அன்புடன் தெரிவித்து கொள்கிறோம் ...

பேரன் பேத்தி

K.பிரதிக்ஷா
K.பிருத்விகா
G.திவிஷிக்

மகள்கள்

E.கிருஷ்ணகாந்த்
திவ்யா கிருஷ்ணகாந்த்
M.கௌதம் ராம்
ஓவியா கௌதம் ராம்



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

108 Rooms & Suites | 03 Banquet Halls

[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com

Thiruvasantham
PURE VEG

A Traditional South Indian Pure Vegetarian Restaurant

Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

தமிழக முதல்வரின் பாராட்டு

முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை

அண்ணா அறிவாலயம், சென்னை - 18

சான்றிதழ்

பெயர் : மு. சுப்பராயன்

ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் : சீர்காழி நகரம்

மாவட்டம் : மயிலாடுதுறை

கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்புகளில் "முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை"ச் சார்பில் "கழக விருது"க்கான ரூபாய் 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையும்), மற்றும் சான்றிதழும் வழங்கி வாழ்த்துகிறது.

நாள்: 17.9.2024

இடம்: அறிவாலயம்

தலைவர்,
முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா செம்மங்குடி

திரு.மணிப்பிள்ளை - வளர்மதி

ஆகியோரின் மூத்த மகனும், எனது தந்தையுமான

தம்பி.ம.சுப்பராயன்

நகர் மன்ற துணைத்தலைவர்,

சீர்காழி நகர செயலாளர், திமுக அவர்களுக்கு 17.09.2024 அன்று சென்னையில் நடைபெற்ற திமுக பவள விழா மாநாட்டில் 20 ஆண்டுகள் சீர்காழி நகர செயலாளராக சிறப்பாக செயல்பட்டதற்காக

மாண்புமிகு. முதல்வர் அவர்கள் **பாராட்டி சான்றிதழ்** மற்றும் **1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)** காசேலை வழங்கி பாராட்டினார்கள். இவர் தமிழக அளவில் தேர்ந்து எடுக்கப்பட்ட 2 பேரில் ஒருவர் ஆவார். எனது தந்தை அவர்களை தேர்வு செய்த முதல்வர் அவர்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு

B.ஓவியா (எ) கிருத்திகா - S.பாலசுந்தரம்

தலைஞாயிறு.

வாழ்க மணமக்கள் ....



திருச்சி, ஸ்ரீரங்கம், திரு. S.ராஜரத்தினம் – திருமதி.V.அருள்செல்வி
இவர்களின் அன்பு மகள்
திருவளர்ச்செல்வி **நர்மதா (எ) R. ரஞ்சனி** M.Sc., B.Ed.,
பின்னலூர் (சிதம்பரம்), திரு.A.ராஜாமணிப்பிள்ளை – திருமதி. R. புவனேஸ்வரி
இவர்களின் அன்பு மகன்
திருவளர்ச்செல்வன் **செல்வம் (எ) R. முத்துக்குமரன்** B.E.,
இவர்களின் திருமணம் மயிலாடுதுறை, மகாதானத்தெரு, அபிராமி ஹாலில் (06.09.2023) வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
மணமக்கள் வரவேற்பிற்கும், திருமணத்திற்கும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திய அன்புள்ளம் கொண்ட உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும், மயிலாடுதுறை கார்குல சேவை செம்மல்களுக்கும் எங்களது அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள,

A. ராஜாமணிப்பிள்ளை
R. புவனேஸ்வரி

S. ராஜரத்தினம்
V. அருள்செல்வி

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

- பிறந்தநாள் விழா, மஞ்சள் நீராட்டு விழா மாணவ / மாணவிகளின் Get together போன்ற சிறிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக எங்கள் விடுதி அமைந்துள்ளது.
- மருத்துவ காரணங்கள் மற்றும் தற்காலிகமாக சில நாட்கள் தங்க சமையலறை வசதியுடன் கூடிய தங்குமிடம் எங்களிடம் உள்ளது. இவ்வசதி வேண்டுவோர் மேற்கண்ட செல் நம்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
- Free Driver Accommodation Available

இதழின் உள்ளே....

வேக உணவும் அதிவேக வியாதிகளும்! 11

குடும்ப உறவுகளின் பலமும், பலவீனமும் ? 15

சங்கப் பலகை 22

சிறுவர் பகுதி..... 25–28

இறந்த பிறகு செய்யவேண்டிய சட்டப்படியான சம்பிரதாயங்கள்.....33

மணமகன் / மணமகள் தேவை .....37 – 40

சங்க நிகழ்வுகள் 41

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

எம் குலச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் ஒப்பற்ற வணக்கங்கள் உரித்தாகுக. பாரிஸில் நடைபெற்றபாரா ஒலிம்பிக் போட்டிகளில் 29 பதக்கங்களை நம் விளையாட்டு வீர், வீராங்கனைகள் வென்று, நமது நாட்டுக்குப் பெருமைத் தேடி தந்துள்ளனர். கடந்த பாரா ஒலிம்பிக் போட்டியில் வென்ற பதக்கங்களை விட 10 பதக்கங்கள் அதிகம்வென்று, மக்களின் நம்பிக்கைக்கு உரமிட, சென்னையில் நடைபெற்ற தெற்காசிய தடகளத்தில் 48 பதக்கங்களை வென்று, நமது தேசத்தினை முன்னிலை வகிக்கச் செய்துள்ளது, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. அனைத்து வீரர்களுக்கும் நமது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்! செஸ் ஒலிம்பியாடில் இந்திய வீரர்கள் ஆண்கள் அணிக்கான தங்கமும், பெண்கள் அணிக்கான தங்கமும் வென்று புதிய வரலாறு படைத்துள்ளனர். அவர்களுக்கும் நமது வாழ்த்துக்களும்! பாராட்டுகளும்!

செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி மத்திய அமைச்சரவை சந்திரயான் – 4 என்ற, நிலவில் வீரர்கள் இறங்க தேவையான புதிய திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. நிலவின் தென்பகுதியை ஆய்வு செய்ய, இஸ்ரோ 2023 ஜூலை 14–ஆம் தேதி சந்திரயான் –3 விண்கலத்தை வெற்றிகரமாக ஏவி சாதனை படைத்துள்ளது. நிலவில் இறங்கிய நான்காவது, நாடாகவும், மற்றும் தென்பகுதியில் தரை இறங்கிய முதல் நாடு என்ற பெருமையையும் நம் நாடு பெற்றுள்ளது. இந்நிலையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட சந்திரயான்–4, ககன்யான், இந்திய விண்வெளி நிலையம், வெள்ளி கிரகத்தை ஆய்வு செய்யும் திட்டம் உள்ளிட்ட முக்கிய விண்வெளி திட்டங்கள் வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

ஒரே நாடு! ஒரே தேர்தல்! என நடுவண் அரசு, முன்னாள் ஜனாதிபதி திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையில், உயர்மட்டக் குழு தயாரித்த ஒரே நாடு; ஒரே தேர்தல் அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த திட்டம் புதிதல்ல; 1952 லிருந்து 1967 வரை ஒரே நேரத்தில் பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்ற தேர்தல்கள் நடைபெறும் வழக்கம் இருந்தது. 67–ல் அறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் தமிழகத்தில் அவரது கட்சி சட்டசபைக்குப் பெரும்பான்மை பலம் பெற்றதால், அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சரானார். அதன் பின் தொடர்ந்து லோக்சபா மற்றும் சட்ட சபைகள்

முன் கூட்டியே கலைக்கப்பட்டதால், ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் முறை வழக்கொழிந்தது. இம்முறை நடைமுறைக்கு வரின், ஐந்தாண்டுகளுக்கொரு முறை 2 அல்லது 3 மாதங்களே தேர்தல் காலமாக இருக்கலாம். தேர்தல் செலவும் கணிசமாக குறைய வாய்ப்பும் உண்டு. நடைமுறைக்கு வருமென எதிர்பார்ப்போம்.

நமது அண்டை தேசமான இலங்கையில், இரண்டாம் கட்ட ஓட்டு எண்ணிக்கையைத் தொடர்ந்து, இலங்கையின் புதிய அதிபராக 55.89% வாக்குகள் பெற்ற திரு. அனுராகுமாரதிச நாயகே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இரு நாடுகளும் ஒற்றுமையுடன், நாட்டின் முன்னேற்றத்திற்காக செயல்படவேண்டுமென, அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவரை வாழ்த்துகிறோம்.

இந்துக்களின் முக்கிய பண்டிகையான தீபாவளி இம்மாதம் கொண்டாட உள்ளோம். தென்னிந்தியாவில் நரகாசுரனை வதம் செய்த நாளை தீபாவளியாக மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம். வடமாநிலங்களில் வனவாசம் சென்ற இராமபிரான், அயோத்தி திரும்பும் நாளாக, இல்லங்களில் விளக்கேற்றி வைத்து, வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். நம் உறவுகள் அனைவரும் தீபாவளி பண்டிகையை மன மகிழ்ச்சியுடன் கொண்டாட, சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் வாழ்த்துகிறது.

அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

* முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. **8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

– கார்காத்தார் ஒப்புரவு

வேக உணவும் அதிவேக வியாதிகளும்!

துரித உணவுகள்... இவற்றின் பாதிப்புகளிலிருந்து தப்பிக்க, மேலை நாடுகளே இயற்கையான உணவுகளைத் தேடத் தொடங்கிவிட்டன. நாமோ இன்னமும் ஃப்ரைடு ரைஸ், பீட்ஸா.... போன்ற துரித உணவுகளின் மாயவலையில் சிக்கிய மான்களாக அவதிப்படுகிறோம். விரைவில் இந்த மாயவலையைக் கிழித்துக்கொண்டு வெளிவராவிட்டால், நோய்களின் கூடாரமாக மாறிவிடும் நமது உடல். இன்று இந்தியாவில் Fast Food உணவுகளின் ஆதிக்கம் தான் அதிகமாக உள்ளது. ஆன்லைன் ஆர்டரில் கூட இந்த உணவுகள்தான் கொடி கட்டிப் பறக்கின்றன. அதிக விலை கொடுத்து ருசி பார்க்கும் மக்கள் அதன் சுவையில் இருக்கும் ஆபத்தை ஏனோ மறந்து விடுகின்றனர். அதை நினைவுப்படுத்தவே இந்தக் கட்டுரை.

அதிக கொழுப்பு, சர்க்கரை, சீஸ் என எந்தவித ஊட்டச்சத்துகளும் இல்லாத இந்த Fast Food, உணவுகள் வயிற்றை மட்டும் நிரப்புகின்றன. இதைத் தொடர்ந்து முறையற்ற வாழ்க்கை முறை மேலும் ஆபத்தை நோக்கி நகர்த்துகிறது. அப்படி தொடர்ந்து அளவுக்கு அதிகமான Fast Food உணவுகளை சாப்பிடுவதால் ஏற்படும் ஆபத்துக்கள் என்னென்ன பார்க்கலாம்.

வரலாற்றுப் பாதை : துரித உணவுகளின் வரலாற்றுப் பாதையை உற்று கவனித்தால், அவற்றுக்கும் நமது வரலாற்றுக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. வேறு சூழலில் வாழும் மக்களின் உணர்வுடனும் வாழ்வுடனும் தொடர்பு கொண்டிருக்குமே தவிர, நமது வாழ்வுக்கும் உணர்வுக்கும் அவற்றோடு எந்தச் சம்பந்தமும் இருக்காது. ஆனால், இப்போது இருக்கும் நிலைமையைப் பார்க்கும் போது, சீராக பயணித்துக் கொண்டிருக்கும் நமது உணவு வரலாற்றுப் பாதை இனி திசைமாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. நமது பாரம்பரிய வரலாற்றுப் பாதையில் பயணித்து வரும் உணவுகள், நிச்சயமாக நோய்களை உண்டாக்காது. ஆனால் சமீபத்தில் நுழைந்து உணவுப் புரட்சி ஏற்படுத்திக் கொண்டிருக்கும் துரித உணவுகள் உண்டாக்கும் நோய்களோ எண்ணிலடங்காதவை.

வாலிபருக்கு மாரடைப்பு : சத்துக்கள் நிறைந்த நமது பாரம்பரிய உணவுகளை அடித்து விரட்டிவிட்டு, துரித உணவுகளைப் பெருமைப்படுத்துகிறோம். மினிசைஸ் சீஸ் சாண்ட்விச், மீடியம் சைஸ் பர்கர் 'லார்ஜ் சைஸ் ஃபேமிலி பிட்ஸா' ... என சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சைஸ் வாரியாகப் பிரித்து உண்கிறோம். நோய்களோ குழந்தைகள், பெரியவர்கள் என்று வயது வித்தியாசமெல்லாம் பார்ப்பதில்லை. எழுபது வயது முதியவர் மாரடைப்பால் மரணம் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? தவறான உணவுப் பழக்கத்தால், இளம் வயதினருக்கும் மாரடைப்பு ஏற்படும் அதிர்ச்சியான செய்திகள் தமது செவியில் கேட்கத் தொடங்கிவிட்டன. தவறான உணவுப் பட்டியலில், துரித உணவுகள் முக்கிய பங்கு வகிப்பவை.

உடல் பருமன் : துரித உணவுகள் நமது சுவை உணர்ச்சிகளுக்கு மகிழ்ச்சியூட்ட மட்டும் தயாரிக்கப்படுபவை. உடல் நலத்தை மேம்படுத்தக்கூடிய எந்தவிதமான ஆரோக்கியக் கூறுகளும் அவற்றில் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. கலோரிகள் நிறைந்த உணவுகளாக இருப்பதால், உடலை விரைவாக பருக்கச் செய்யும் திறன் வாய்ந்தவை. உடல்பருமன் நோய் அதிகரிப்பதற்கு இவை முக்கியப் பங்காற்றுகின்றன. ஒரு முழு பீட்ஸா உட்கொண்டால், உடலில் சேரும் கலோரிகளைக் கரைக்க பல கிலோமீட்டர் தொலைவு வேகமாக ஓட வேண்டி இருக்கும். நாம் முதலில் சில மீட்டர்களாவது தினமும் நடக்கிறோமா என்பதே கேள்விக்குறி, பின் எப்படித் தேவையில்லாமல் அதிகரித்த கலோரிகளை வெளியேற்றுவது. இந்த கலோரிகள், உடலில் கொழுப்பு சேர்மானத்தை அதிகரிக்கச் செய்து, கடுமையான பாதிப்புகளை உண்டாக்கும்.

ஊட்டச்சத்துக் குறைபாடு : அவசரத்துக்கு ரெடிமேடாகக் கிடைக்கும் துரித உணவுகள், அவசர அவசரமாக நோய்களை உண்டாக்கும். இன்சுலின் சுரப்பதில் பாதிப்பை உண்டாக்கி, சர்க்கரை நோயை துரித உணவுகள் உண்டாக்குவதாக அமெரிக்காவில் "National Institute of Health (NIH)" வெளியிட்ட ஆராய்ச்சி முடிவு தெரிவிக்கிறது. பத்து வயது சிறுவனுக்குக் கூட இரண்டாம் வகை சர்க்கரை நோய் (Type-2 Diabetes) வருவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம். பிள்ளைகள் தொடர்ந்து துரித உணவுகளைச் சாப்பிடும் போது உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக் கிடைக்காமல், ஊளைச்சதை மட்டுமே வளரிளம் பருவத்தில் அதிகரிக்கும். உடல் வளர்ச்சி ரீதியில் பல செயல்பாடுகள் பாதிக்கப்படும்.

சமாதானம் செய்ய பீட்ஸா, பர்கர் : பள்ளிக்குச் செல்ல அடம்பிடிக்கும் குழந்தைகளை சமாதானப்படுத்த, பள்ளிக்குப் போகும் வழியில் பீட்ஸா, பர்கர்களை வாங்கிக் கொடுக்கும் சில பெற்றோர்கள், தங்கள் வழிமுறையை மாற்றிக் கொள்வது நல்லது. நீங்கள் குழந்தைகளைச் சமாதானப்படுத்துகிறீர்கள் என்று நினைத்துக் கொண்டு, அவர்களுக்கு நோய்களை வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்று அர்த்தம். பெற்றோர்களே தங்கள் பிள்ளைகளுக்கு எதிரி ஆகலாமா? "இன்னிக்கு ஸ்கூலுக்கு போயிட்டு வர, ஈவினிங் உனக்கு ஒரு பர்கர் வாங்கித் தரேன்" என்று பர்கர்களை ஊட்டி வளர்த்தால், பர்கர் போன்ற உருண்டையான தோற்றத்தில் உங்கள் குழந்தைகளை விரைவில் பார்க்கலாம். கண்டிப்புடன் இவை போன்ற உணவுகளுக்கு தடை விதிப்பதில் எந்தப் பாரபட்சமும் பெற்றோர்கள் காட்டக் கூடாது.

உப்பு.... வெள்ளை சர்க்கரை : துரித உணவுகளைத் தொடர்ந்து சாப்பிடும் போது, ரத்தக் குழாய்களில் கொழுப்புத் திட்டுக்கள் படிந்து, அவற்றின் சுற்றளவைக் குறுக்கி, குருதி சுற்றோட்டத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தி, இதய நோய்களை உண்டாக்கும். இதிலிருக்கும் உப்புகள் காரணமாக உயர் ரத்த அழுத்தம் வருவதற்கான சாத்தியங்கள் அதிகம். மருத்துவர் அறிவுறுத்தலின் பேரில் நேரடியாக உப்பின் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ளும் நடுவயது உயர் ரத்த அழுத்த நோயாளிகள், மறைமுகமாக உப்புகள் நிறைந்த துரித உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்வது அறியாமை. அளவுக்கு அதிகமாக உப்புகளோடு வெள்ளைச் சர்க்கரையும் கலந்த சுவையூட்டும் உணவுகள், மனதுக்கு களிப்பை உண்டாக்கி, ஆரோக்கியத்துக்கு வேட்டு வைத்து விடும்.

ஹார்மோன்கள் பாதிப்பு : ஹார்மோன் சமநிலையைத் தகர்த்து, உடலின் செயல்பாடுகளில் பல்வேறு மாறுதல்களை துரித உணவுகள் உண்டாக்கி விடுகின்றன. இளம் பெண்களுக்கு சினைப்பைக் கட்டிகள் அதிகரிப்பதற்கு மிக முக்கியக் காரணம் "ஜங் ஃபுட்ஸ்" எனப்படும் துரித உணவுகள் தான். எள்ளுருண்டைகளையும், உளுந்தங்களியையும் அதிகமாகச் சாப்பிட்ட முந்தைய தலைமுறைப் பெண்களுக்கு சினைப்பைக் கட்டிகள் என்றால் என்னவென்றே தெரிய வாய்ப்பில்லை.

பள்ளி நிர்வாகம் செய்யும் தவறுகள் : முறையான உணவியலை கற்றுக்கொடுக்க வேண்டிய பள்ளிகள், தவறான உணவுகளை அறிமுகப்படுத்துகின்றன. சில பள்ளி கேன்டீன்களில் அதிகம் விற்பனையாகும் சிற்றுண்டி பீட்ஸாவாகத்தான் இருக்கிறது. எண்ணெயில் பொரித்த சிப்ஸ் வகையறாக்களும், பாட்டில்களில் அடைக்கப்பட்ட பன்னாட்டு குளிர்பானங்களும், சீஸ் தடவிய பர்கர், பீட்ஸாக்களும் சில பள்ளிகளின் உணவு பட்டியலில் தவறாமல், இடம் பெறுகின்றன. அதுவே மறுபுறம், அரசுப் பள்ளிகளில் இருக்கும் சத்துணவு கேன்டீன்களில் கிடைக்கும் கீரைகளும், காய்களும், முட்டைகளுமே எளிமையான சிறந்த தேர்வு.

உணவியல் கற்றுக்கொடுக்கும் பள்ளிகள் தேவை :

லட்சக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு கல்வி கற்றுக் கொடுக்கும் பல தனியார் பள்ளிகள் உணவு விஷயத்தில் தேர்ச்சி பெறுவதில்லை. பள்ளிப் பருவத்தில் கற்றுக்கொண்ட தவறான உணவியல் பழக்கம், வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. முறையற்ற உணவியலைக் கற்றுக் கொடுக்கும் பள்ளிகளில் படிக்கும் நிறைய குழந்தைகளுக்கு உடல்பருமன் பிரச்சனை இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். கல்வியோடு சேர்த்து, உணவியலையும் கற்றுக் கொடுக்கும் பள்ளிகளை நாடுவது சிறந்தது. "துரித உணவுகளை அறிமுகப்படுத்தாமல் வளர்த்தாலும், பள்ளிகளில் துரித உணவுகளுக்கு அடிமையாகிவிடுகின்றனர் என்பது பெற்றோர்களின் ஆதங்கம். இப்போது துரித உணவுகளுக்கும், பன்னாட்டுக் குளிர்பானங்களுக்கும் பல பள்ளி வளாகங்களில் தடைவிதிக்கத் தொடங்கியிருப்பது ஆறுதல் தரக்கூடிய விஷயம்.

ஒருமனிதஉடலுக்குள்,பலவகையானநோய்கள் வாடகையின்றி குடியிருப்பதற்கான காரணத்தை ஆராய்ந்தோமா ? உடல் உழைப்புமில்லாமல், உணவுத் தேர்வும் சரியாக இல்லாமல், அறியாமையால் நமது உடலைக் கபளீகரம் செய்து கொண்டிருக்கிறோம். மாற்றம் தேவை. கொஞ்சம் கூட யோசிக்காமல், துரித உணவுகளை நம் எண்ணங்களில் இருந்து அழித்தாக வேண்டும். ஒவ்வொருவரும் துரித உணவுகளின் பாதிப்புகளைப் பிறருக்கு எடுத்துக் கூறுவது சமுதாயத்துக்கு செய்யும் நல்ல சேவையாக இருக்கும்.

நாம் வெளியில் அதாவது பெரிய விடுதிகளில் அமர்ந்து சாப்பிட்டாலும் அல்லது துரித உணவுகடைகளில் நின்று கொண்டு சாப்பிட்டாலும், அவற்றில் நார்ச்சத்து, ஊட்டச்சத்துகள், கால்சியம், இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் சி போன்றவை குறைவாகவே இருக்கும். ஆனால் ஒரு நல்ல ஆரோக்கியமான உணவில் போதுமான அளவில் நார்ச்சத்து, புரோட்டீன், ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்ற தடுப்பான்கள் இருக்கும். அவை நமக்கு ஆரோக்கியத்தைத் தருவதோடு, நமது உடலை நோய்கள் அண்டவிடாமல் பாதுகாக்கும். ஆகவே வீட்டில் சமைக்கப்படும் உணவுகளை உண்பதே ஆரோக்கியத்தைத் தரும். எனவே உடலுக்கு தீவிர ஆபத்தை உண்டாக்கக் கூடிய Fast Food உணவுகளை முற்றிலுமாக தவிர்த்து ஆரோக்கியமான சத்தான உணவுகளை உட்கொள்ளுங்கள். வாழ்நாள் முழுவதும் நல்ல ஆராக்கியத்தையும் மகிழ்ச்சியான வாழ்க்கையையும் அனுபவிக்க ஜங்க் உணவுகளை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்; தவிர்ப்போம்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை – 90.
செல் : 9943702054

திருத்தம்

செப்டம்பர் மாத கார்காத்தார் ஒப்புரவு இதழில் நெய்வேலி சைவ வேளாளர் கழகத்தின் பொன் விழா பற்றிய செய்தி. பல ஆண்டுகளுக்கு முன்பு 1994 – 95 கால கட்டத்தில் அப்போதைய ஒப்புரவு இதழை நடத்துவதில் நிதி பற்றாக்குறை ஏற்பட்டபோது நெய்வேலி சங்கம் நிர்வாகிகளின் முழு ஆதரவுடன் அன்றைய நிலையிலேயே நினைத்துப் பார்க்க முடியாத ஒரு பெருத்த தொகையை வசூலித்து நிதி உதவி அளித்ததை கார்காத்தார் ஒப்புரவின் வெளியீட்டாளரான கைலை. சண்முகம் தன்னுடைய வாழ்த்துரையில் மகிழ்ச்சியுடன் நன்றி கூர்ந்தார்.

"அவ்வினைக்கு இவ்வினையாம்"

– கோலாகலன்

சென்ற இதழ் தொடர்ச்சி.....

"நிலைத்த மெய்ப்பொருள் சிவம். அதனை அறிவது ஞானம். அறிந்த அதனை உணர்ந்து தெளிவது, தெளிந்ததைத் தொடர்வது போதம்." இதனைக் கேட்டதும் சிவஞானம் உணர்ந்த முதலமைச்சர் குருவின் பாதங்களில் விழ அவர் தமது திருவடிகளை இவர் தலையில் வைத்தருளினார்.

ஞானம் பெற்ற இவர் நம் குருநாதர் மேல் மணிமணியான சொற்களைக் கோத்துப் பாடினார். அதனைக்கேட்ட குருநாதர் மணிமணியாகத் திருவாசகம் பாடிடுவதால் உன்நாமம் மணிவாசகன் என்றாகட்டும்என்றவர்மறையஎல்லோரும்மறைந்தனர். அசரீரி வழியே வந்ததும் அருளியதும் சிவனே என் பதறிந்தார். குருவிற்குக் காணிக்கையாகக் கோயில் கட்ட எண்ணினார். குதிரை வாங்க வந்த வேலையை மறந்தார். பன்னிரண்டு ஆயிரம் பொற்காசுகளைக் கொண்டு திருப்பெருந்துறையில் அருமையான கற்றளியைக் கட்டி முடித்தார்.

மன்னனுக்குச் செய்தி போகிறது. மன்னன் ஓலை ஒன்றைத் தூதர் கையில் கொடுத்து வாதவூரனைக் கைக்கொண்டுவா எனப் பணித்தான். ஓலையைக் கண்ட வாதவூரர் ஓலைச் செய்தியை இறைவன் திருமுன்னர் ஓங்கி உரைத்தார். அதனைச் செவிமடுத்த சிவபெருமான் "ஆவணி மூலத்தன்று குதிரை வரும் என்று கூறு. இந்த மாணிக்க மணியினை மன்னனுக்குக் கையுறையாகக் கொடுத்துப் பாண்டியனைக் காண்க" எனக் கூறியனுப்பினார். வாதவூரர் மாணிக்கத்தை மன்னனிடம் கொடுத்துக் குதிரை வரும் என்று உறுதியளித்தார். மன்னன் மகிழ்ந்தான். துணையமைச்சருள் ஒருவன் மன்னனிடம் சென்று வாதவூரர் சொல்வதெல்லாம் பொய் என்றான். ஐயப்பட்ட அரசன் வாதவூரரைச் சிறையிலிட்டான். வாதவூரர் சிவனிடம் வேண்டினார். ஆவணி மூ லத்தன்று குதிரைகளை பெருமானே கொண்டு வந்தார். நரிக்குடியில் உள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி சிவ கணங்களை அவற்றின் மீது அமரச் செய்து தானும் ஒரு குதிரையில் வந்தார். குதிரைகள் கைமாறின. மாணிக்கவாசகர் ஆன வாதவூரர் விடுவிக்கப்பட்டார். இரவு குதிரைகள் நரிகளாய் மாறி இருந்த குதிரைகளைக் கடித்துக் குதறிவிட்டு ஓடிவிட்டன. செய்தியறிந்த மன்னன் வாதவூரரை வைகையாற்றுச் சுடுமண்ணில் நிறுத்தித் தண்டித்தான். இவர் இறைவனிடம் முறையிட, சிவன் வைகையில் கங்கையை அனுப்பினார். வைகை வெள்ளத்தால் கரைகள் உடைந்தன. மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். செய்வதறியாத மன்னனிடம் ஓர் அமைச்சர் மெல்ல வந்து இது இறைவன் திருவிளையாடல். வாதவூரரை விடுவித்தால் இவ்வெள்ளம் வடியும் என்றான். வாதவூரிடம் சென்ற மன்னன் தன் பிழை பொறுக்க வேண்டினான். வெள்ளம் வடிய வேண்டும் என்று கோரினான்.

வாதவூரர் இறைவனிடம் வேண்ட வெள்ளம் வடிந்தது. உடைந்த கரைகளை மண்ணிட்டு அடைத்து உயர்த்த அரசாணை பிறந்தது. வீட்டுக்கொருவர் தட்டு மண்வெட்டியுடன் சென்றனர். வந்தி எனும் பிட்டு வாணிச்சிக்காக பெருமானே கூலியாளாக வந்தான். அவள் தினமும் அன்புடன் புட்டு நைவேத்தியம் செய்தமையால் அவள் பால் அருள் புரிய வந்தான். கூலியாளாக வந்த இறைவன் சரியாகப் பணிசெய்யவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. மன்னன் ஆணைப்படி காவலன் ஒருவன் பெருமானைப் பிரம்பால் அடிக்க அந்த அடி மன்னன், வாதவூரர் உட்பட அனைத்துயிர்கள் மீதும் விழுந்தது. வந்திபொருட்டும் தன்பொருட்டும் வந்த சிவனை எண்ணிக் கண்ணீர் வடித்தார்.

இவையாவும் இறைவன் திருவிளையாட்டே என்பதை உணர்ந்த மன்னன் அரிமர்த்தனபாண்டியன் வாதவூரர் முன் வந்து தொழுதான். ஆட்சிப்பொறுப்பினை ஏற்க வேண்டினான். "என்னைத் திருப்பெருந்துறைக்குச் செல்ல அனுமதியுங்கள் மன்னா! அது போதும்" என்றவர் புறப்பட்டுவிட்டார்.

திருக்கயிலாயத்துப் பொன்னைக் கொண்டு வந்த பாண்டிய மன்னன்தான் இப்பிறப்பில் அரிமர்த்தனபாண்டியன். அப்பொன் 12,000 பொன்னாக ஆனது வட்டியும் முதலுமாக அப்பொன் மாணிக்கவாசகர் (முற்பிறப்பில் அவர்தான் சித்தர்) வழி திருப்பெருந்துறை கோயிலாக உருவானது. அரசு பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியது வாதவூரரின் தவறுதான். அதற்குத்தான் தண்டனை. என்றாலும் சிவன் சொத்தைச் சிவனிடமே சேர்ப்பித்தமையால் அவருக்கு இறையருள் கிட்டியது. "அவ்வினைக்கு இவ்வினையாம்" என்பதன் பொருள் புரிகிறதா என்ற சிவகாமி சித்தர் பாடி ஆடத் தொடங்கினார்.

"ஆடு பூவே! பாடு பூவே! ஆனந்தம் அறமொன்று
ஆடுபூவே!
கொடுத்தது நிலைக்கும். எடுத்தது பறக்கும்
உரிமையுடையவர் நோக்கி
இதுதான் அவ்வினைக்கு இவ்வினையாம்"
என்று பாடு பூவே.....என்று

பாடிச் சென்றார் சித்தர். மாணவர்கள் மனநிறைவுடன் புறப்பட்டனர்.

அமைதியைத் தேடி

– கோலாகலன்.

அந்திம காலத்தில், இறக்கும்பொழுது அமைதி அவசியம் வேண்டும். இன்றைக்கு பலர் இந்த அமைதியைப் பெறுவதே இல்லை. காரணம் மனவுறுத்தலும், குற்ற உணர்வுகளுமேயாம். குற்ற உணர்வு என்பது ஒருவகைச் சித்திரவதைதான். இதனைத் தவிர்த்து வாழ அறத்தோடு வாழ வேண்டும். அறம் என்பது பெரும் பிரிவில் நான்காம். அவைவருமாறு. 1) பொறாமைப்படாமை 2) பேராசை கொள்ளாமை 3) சினங்கொள்ளாமை 4) கொடுஞ்சொல் கூறாமை இவற்றின் அடிப்படையில் பிறரை ஏமாற்றாமல் வாழ்ந்தாலே போதும், என்றார் சிவகாமிசித்தர். இதனைக்கேட்ட ஒருவர் இன்றைக்கு வாழ்க்கை என்பதே ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்ளவதாகவே உள்ளது சுவாமி'' என்றார்.

ஏமாற்றுபவன் உறுதியாக ஏமாற்றப்படுவான். அவனது அந்திமகாலம், அவலம் நிறைந்ததாக அல்லல் மிக்கதாக அமையும். என்ற சுவாமிகளைப் பார்த்து மற்றொருவர் யார் யார் எவ்வெவ் குணத்தில் வாழ்ந்தால் அந்திமகால அமைதிகிட்டும் சுவாமி என்றார்.

சிவகாமிசித்தர் பேசலுற்றார்.

ஆசையும் பாசமும் அற்ற குணம் துறவிக்கு அமைதி;
ஞானமும் நல்லொழுக்ககுணமும் குருவிற்கு அமைதி;
மானமும் மொய்ம்பும் (வீரமும்) மறவனுக்கு அமைதி;
நீதியும் நியதியும் மன்னவனுக்கு அமைதி;
நிறைகுலம் காத்தல் மனைவிக்கு அமைதி;
உற்றம் சுற்றம் பேணல் கணவர்க்கு அமைதி;
இறையையும் குருவையும் போற்றல் சீடர்க்கு அமைதி;
பெற்றோரைப் பேணல் பிள்ளைகளுக்கு அமைதி;
அஞ்சாமையும் அறம் உரைத்தலும் புலவர்க்கு அமைதி;
கலப்படமும் கரவாமையும் வணிகர்க்கு அமைதி;
அன்னமளித்தலும் அருவினையாற்றலும் அடியார்க்கு அமைதி::
கற்றலும் கற்பித்தலும் ஆசானுக்கு அமைதி;
கரவின்றி பொறுத்தலும் நன்மருந்தளித்தலும் இரக்கமும் மருத்துவர்க்கு அமைதி;
கடமையும் விசுவாசமும் பணியாளர்க்கு அமைதி;
உண்மையும், உயிர்காக்கும் தன்மையும் நண்பர்க்கு அமைதி;
ஆக்கமும் ஊக்கமும் அமைச்சர்க்கு அமைதி;
இரு குடி உயர்த்தும் எண்ணம் மகளிர்க்கு அமைதி;
அறமும் உயிர்க்கு ஊறு எண்ணாமையும் அந்தணர்க்கு அமைதி;
மருகரைத் தாங்குதல் மாமனுக்கு அமைதி;
பொல்லாங்கு சொல்லாமையும், கொடுமை செய்யாமையும் மாமிக்கு அமைதி;
ஏய்க்காமையும் ஏமாற்றாமையுமே குடும்பத்தலைமைக்கு அமைதி;
என்று மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டே
வந்த சித்தர் சற்றே மூச்சு விட்டார்.

இடையில் ஒருவர் பாவம் பற்றிக் கூறுங்கள் சுவாமி என்றாள் சித்தர் உடனே சொல்லலுற்றார்.

''இரக்கமின்மை பாவம்; இழித்தும் பழித்தும் பேசுதல் பெரும்பாவம்; ஒழிய எண்ணுவதும், ஒழிக்க முனைவதும் கொடும் பாவம்'' என்றார். ''நல் வாழ்வு வாழ நான்கு சொல்லுங்கள் சுவாமி'' என்றார் ஒருவர். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கிளை எண்ணி அதன்படி வாழ்தல் தான் அமைதியைத் தரும்.

''புரியவில்லை சுவாமி''

''ஈதல் அறம்'' அதாவது நீர், உணவு, உடை, இடம், பொருள், அன்பு, ஆறுதல், உடலுழைப்பு, ஞானம் என எதனை பிறர்க்குக் கொடுத்தாலும் அது சிறந்த அறமாகும். தீவினை விட்டு ஈட்டல் பொருள் – அதாவது பிறரை ஏமாற்றாமல், வஞ்சிக்காமல் உழைத்து நியாயமாக பொருள் ஈட்டுதல் நல்லறம். காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம். அதாவது ஒத்த கருத்துடன், பிணக்கின்றி, இணக்கமாக, உதவி செய்து ஆதரவுடன் கணவன் மனைவி வாழ்தலே இன்பம். பரனை நினைத்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு. அதாவது இறைவனை எண்ணி இம்மூன்றையும் விட்டு விடுதலே வீடுபேறு ஆகும். இதனை அன்றே ஔவையார் சொல்லிவிட்டார். எனவே இவ்வாறு வாழ்ந்தால் எக்காலமும் அமைதிதான்.

மேலும் அமைதி இருவகைப்படும். புற அமைதி ஒன்று, மற்றது அக அமைதி. இன்றை நாளில் புற அமைதி அரிது. அதனை நம்மால் கட்டுப்படுத்த இயலாது. அக அமைதியை புற அமைதி நிலைக்க விடாது. அமைதியைக் கெடுத்து ஆனந்தப்படும் கும்பல் எங்கு பார்த்தாலும் இயங்குகிறது. பயிற்சியின் மூலம், பக்குவத்தின் மூலம் நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். குற்றமற்ற நெஞ்சம், குருகுருவற்ற மனமுமே அடிப்படை. இவை இருந்தால் எப்படியும் அமைதியை அடையலாம்.

ஈனச் செயலைக் கூட்டமாகச் செய்யக் கூடிய கொடிய காலமிது. இக்கொடுமையை நியாயப்படுத்தும் மனோ நிலையும் மெல்ல மெல்ல உருவாகிவிட்டது.

பொருள் (பணம்) எனும் ஆட்கொல்லியின் பேயாட்டம் இன்று பலரையும் விட்டு வைக்கவில்லை. அப்பாவி பலர் பலியாகின்றனர். கற்பனைக்கு எட்டாத பொல்லா நோய்கள் வந்து வதைத்தாலும் உணர்ந்தாரில்லை. பொருளை அவர்கள் நுகர்ந்தாரில்லை. தீயாரே கொள்கின்றார்.'' கூட்டம் பேரமைதியானது. பெருமூச்சு ஒலி மட்டும் கேட்டது. சிவகாமிசித்தர் பாடி ஆடத் தொடங்கினார்.

ஆடு பூவே கூத்தாடு பூவே
ஆனந்தம் தருவது அமைதி
என்று பாடு பூவே!
அறம் பிறழ்ந்து பொய் பேசி
ஆக்கம் பெறுவோர் ஐயோ
என்றழிவர் என ஆடு பூவே
பூண்டற்றுப் போவார் என
பாடு பூவே! ஆடு பூவே!

என்று பாடிக்கொண்டே சித்தர் புறப்பட பார்வையாளர்களும் மெல்ல அமைதியுடன் கலைந்தனர். அந்த இடமும் அமைதியானது.

குடும்ப உறவுகளின் பலமும், பலவீனமும்?

Dr. D. Kalyanakumar, Trichy-18.

நம் தலைமுறையில் குழந்தை பேச ஆரம்பிக்கும்போதே உறவு முறைகளையும் அழகாக அறிமுகப்படுத்தினார்கள் நம் பெற்றோர். அம்மா, அப்பாவில் தொடங்கி அண்ணன், அக்கா, சித்தப்பா, சித்தி, அத்தை, மாமா, அப்பத்தா, அம்மாச்சி, அய்யா, தாத்தா, அத்தான், மச்சான், அத்தாச்சி, மச்சினி, அருமியா, அண்ணி என்று நம் தமிழ் மொழியில் ஒவ்வோர் உறவு உண்டு. அழகழகான பெயர்கள்! ஆனால் இந்தத் தலைமுறை குழந்தைகள், ஆண்கள் அனைவரையும் 'அங்கிள்', பெண்கள் அனைவரையும் 'ஆன்ட்டி' என இந்த இரண்டு வார்த்தைகளுக்குள்ளேயே சுருக்கிவிடுகிறார்கள். இதனால் நாம் தொலைத்தது, ஒவ்வோர் உறவுக்கான பிரத்யேக சொல்லை மட்டுமல்ல... அந்த பந்தங்களின் பிரத்யேகத்தையும் தான். அண்ணன், அக்கா என்று அழைக்கும் போது, வயதில் சிறிது மூப்பு என்பதற்கான மரியாதையுடன் மனதில் கொஞ்சம் சிநேகத்தையும் சேர்த்து வெளிப்படுத்தும் அந்த அழைப்பு சித்தியும், சித்தப்பாவும், அப்பா, அம்மாவிடம் எதிர்பார்க்கும் உரிமையையும், உறவையும் தரக்கூடியவர்கள். அத்தை, மாமா, மச்சான், அத்தான் என இவையெல்லாம் 'முறைக்கார உறவுகள்! கேலியும் கிண்டலும் ததும்பும் பந்தங்கள். வயதில் மூத்தவர்கள் ஆனாலும் வார்த்தைகளில் சீண்டி விளையாடும் உரிமை தரும் சொந்தங்கள்.

அத்தாச்சி / மச்சினி / அண்ணி என்பவர்களும் கிண்டல் செய்யும் உரிமைக்கு உட்பட்ட சொந்தங்களே! அப்பா வழி அப்பத்தா அய்யாவும் அம்மா வழி தாத்தா பாட்டியும் கிளைகளின் வேர் சொந்தங்கள் இதில் விசேஷம் என்னவென்றால் நம் தமிழ்க் குடும்பங்கள் ரத்த சொந்தங்களுக்கு மட்டும் இந்த உறவை எழுதிவைக்கவில்லை. பக்கத்து வீட்டு அத்தை எதிர்வீட்டு 'சித்தப்பா' கடைசி வீட்டு 'அப்பத்தா' தெரு முக்குக்கடை அண்ணன் என்று அனைவரையும் முறை சொல்லிக் கூப்பிடும் அன்பு நிறை கலாசாரம் நம்முடையது இதில் வயதின் அடிப்படையில் தங்களுக்குப் பிடித்தமான பாதுகாப்பான கண்ணியமான உறவுமுறைப் பெயர்களை அவரவர்க்கு ஏற்ப அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். உதாரணமாக ஒரு பெண் தன்னைவிட வயதில் சற்று மூத்த ஆணை 'அண்ணே' என்று அழைத்து ஒரு பாதுகாப்பான பந்தத்தை உருவாக்கிக்கொண்டார். அதேபோல தங்களைவிட வயதில் இளைய பெண்ணாக இருந்தாலும் கூட ஆண்கள் பலர் திருமணமான பெண்களை அண்ணி, மதினி என்று அழைத்து தங்கள் மரியாதையை வெளிப்படுத்தினர்.

இன்றைய சமுதாய சூழலில் நற்பண்புகள், நல்லொழுக்கம் ஆகியவையெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு மனிதனின் வாழ்க்கைத்தரத்தை பணம் ஒன்றை மட்டும் கொண்டு நிர்ணயிக்கக் காண்கிறோம். தனி மனிதனிடம் மட்டுமல்லாமல் குடும்ப உறவுகளிலும் பணம் ஒரு பலம்வாய்ந்த இணைப்புச் சங்கிலியாக வடிவெடுத்துள்ளது. நெருங்கிய ஏழை சுற்றத்தாரை பணக்காரர்களில் பெரும்பாலானோர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்பது நிதர்சனமான உண்மை. அது மட்டுமின்றி அப்படிப்பட்ட ஏழை எளிய சொந்த பந்தங்களுடன் உறவு பாராட்டினால் அவர்கள் அடிக்கடி வந்து தங்கள் தேவைகளுக்காக உதவி கோரி விட கூடும் என்று செல்வந்தர்கள் பயப்படுகிறார்கள். வம்சாவழியிலோ, இரத்த சம்பந்தப்பட்ட தொடர்பிலோ எந்த இணைப்பும் இல்லாதவர்கள் அனைவரும் பணம் என்ற ஒரு காரணியை வைத்துக்கொண்டு பணக்காரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விடுவதை நாம் இன்று காண்கிறோம். இவர்கள் நம் வீட்டு விருந்து போன்ற நிகழ்ச்சிகளில் கூட பணக்காரர்களையே விழுந்து விழுந்து உபசரிக்கிறார்கள். தம் நெருங்கிய உறவினர்களை அவர்கள் ஏழைகள் என்ற ஒரே காரணத்திற்காக இது போன்ற நிகழ்ச்சிகளில் கண்டு கொள்ளாமல் இருந்துவிடுகின்றனர்.

முன்பெல்லாம் சுற்றத்தாரைப் பராமரிப்பது என்பது இயல்பாக இருந்தது. எல்லார் வீட்டிலும் கணவனை இழந்த ஒரு அத்தையோ, மாமியோ பாசத்தோடு பராமரிக்கப்பட்டார்கள். அவர்களைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே எண்ணி

அன்பு செலுத்தினார்கள். அவர்களுக்குச் செய்யும் செலவைத் தங்கள் கடமை என்றே உணர்ந்தார்கள். தன்னைச் சார்ந்திருக்கும் அத்தையையும், மாமியையும் பொருளாதாரச் சுமை என்று யாரும் கருதியது கிடையாது. அவர்களும் அந்தக் குடும்பத்தோடு இணைந்து அந்தக் குடும்பத்தில் ஒருவராகவே வாழ்ந்தார்கள். சமையல் செய்வதிலிருந்து குழந்தை வளர்ப்பு வரை அவர்கள் செய்த சேவைகளும் பலப்பல. தாயும் தந்தையும் இறந்த போது விம்மி விம்மி அழுத பிள்ளைகள், தங்கள் அத்தையும் மாமியும் காலமானபோதும் அதே உணர்வோடு அழுது அரற்றினார்கள். புகலிடமற்ற அத்தை, மாமி போன்றோரெல்லாம் அண்ணன், தங்கை போலவே அக்காலக் குடும்ப அமைப்பின் அங்கத்தினர்களாக மாறியிருந்தார்கள்.

பழைய திரைப்படப் பாடல்களில் 'அத்தையடி மெத்தையடி ஆடி விளையாடம்மா' மற்றும் 'மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக உலகை விலை பேசுவார்' மாமன் உறவுகளுடைய முக்கியத்துவத்தை விளக்கும் திரைப்படப் பாடல்கள் பல வெளியாயின. அதே போன்று அண்ணன் தம்பி உறவு முறைகளை 'முத்துக்கு முத்தாக சொத்துக்கு சொத்தாக அண்ணன் தம்பி பிறந்து வந்தோம் ஒன்னுக்கு ஒன்னாக' போன்ற பாடல்களையும் கூறலாம். கணவன், மனைவி இருவரும் வெவ்வேறு இடங்களில் பணியாற்றுதல் மற்றும் குழந்தைகளும் கல்வி சம்பந்தமாக தொலை தூரங்களுக்குச் செல்வதால் கூடி வாழ வழியில்லாமல் போய் விடுகின்றது. பொதுநாள் விடுமுறை, பண்டிகை தினங்களிலோ அல்லது ஞாயிறு போன்ற நாட்களில் மட்டுமே ஒன்று கூட வாய்ப்பு ஏற்படுகிறது. இன்று பலர் சிறிய இடப்பரப்பினைக் கொண்ட வீடுகளில் வசித்து வருவதால் அவர்களுடைய வீட்டிற்கு வரும் நெருங்கிய உறவுகள் அரை மணிநேரமோ அல்லது ஒரு சிற்றுண்டியை முடித்துவிட்டு அங்கு தங்காமல் சென்றுவிடுகின்றனர். இன்றைய குழந்தைகளுக்கு நெருங்கிய உறவுகள் யார், அவர்கள் என்ன உறவு என்பதனைக் கூட அறிய வாய்ப்பில்லை.

நவீன காலத்தில் சகல உறவினர்களையும் மறந்து தானும் தனது குடும்பமும் என்ற நிலைமை சமூகத்தினர்களிடையே அதிகரித்திருக்கின்றது. சகோதர சகோதரிகளுக்கிடையிலான உறவு பாதிப்புற்று ஆரோக்கியமற்றிருக்கின்றது. தாய், தந்தையர்களை கவனியாது. அவர்களது தேவைகளை நிறைவேற்ற உதவாத பிள்ளைகளையும், சில கிராமங்களில் திருமண வைபவங்களின் போது தந்தையினை அழைக்கக் கூடாது என்று நிபந்தனை இடுகின்றவர்களையும் காணலாம். திருமண பந்தத்தின் மூலம் இரு குடும்பங்கள் இணைந்து, அதனால் புதிய முகங்களும் புதிய உறவுகளும் கிடைக்கின்றன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற உறவினர்கள் தூரமாகி செல்லும் நிலைமையினை குடும்பங்களில் காணலாம். திருமணத்திற்கு முன்பு உச்சத்தினை எட்டிய திருமணத்தின் மூலமான உறவுகள் திருமணத்திற்குப் பிறகு இருந்த தடம் தெரியாமல் திசை மாறும் நிலைமை குடும்ப உறவினர்களிடையே நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் குடும்ப உறவினர்களிடையே அன்பும் பிணைப்பும் அற்றுப் போனமைக்கான காரணம் யாது? அதனை வளர்ப்பதற்கான வழிமுறைகள் என்ன? சிறந்த குடும்ப உறவின்பண்புகள்யாவை? போன்றகேள்விகளுக்கான தெளிவினைப் பெற முயற்சிக்கலாம்.

குடும்ப பிணைப்பு உறவினர்களிடையே குறைந்து போனமைக்கான காரணத்தினை எடுத்துக்காட்டாக பின்வருமாறு சுட்டிக் காட்ட முடியும் குடும்ப உறவினை பேணி நடப்பது பற்றிய போதிய அறிவில்லாமை, பணத்தாலும், பதவியாலும், பெருமையினை வெளிப்படுத்துதல் பெற்றோர் தமது குடும்ப உறவினர்களுடன் உறவை பேணாமையினால் பிள்ளைகள் அதை தொடர்கின்ற நிலைமை குடும்ப உறவினர்களிடையே வெறுப்புணர்வினை வெளிப்படுத்திய பார்வை, சந்திப்பதில் நீண்ட இடைவெளி, உறவினர் நலனில் விருப்பினை வெளிப்படுத்தாமை, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளிடையே பாகுபாடு காட்டுதல், சொத்து பங்கீட்டில் பாகுபாடு காட்டுதல், உறவினர்கள் விஷயத்தில் பொறுமை இழத்தல், பொறாமை, மற்றும் தீய எண்ணம் போன்ற பல காரணங்களைக் கூறலாம். மேற்சொல்லப்பட்ட பல காரணங்களினால் குடும்பத்தினரிடையே பிளவுகள் ஏற்பட்டு இரத்த உறவினர்கள் பகைமையினையும் குரோதத்தினையும் வெளிப்படுத்தி வருடக் கணக்காக வாழ்ந்து வருகின்றமையினைக் காண்கிறோம். இந்நிலைமை மாற்றப்பட்டு, குடும்ப உறவினர்களுடன் உறவினை புதுப்பித்துக் கொள்ள சகலரும் முயற்சித்தல் அவசியமாகும். குடும்ப உறவுகளை வளர்ப்பதில் பெற்றோர்கள் முக்கிய கவனம் செலுத்துதல்

அவசியமாகும். தமது உறவினர்கள் பற்றி பிள்ளைகளுக்கு அறிவூட்டி, அவர்களது உறவின் முக்கியத்துவத்தினைக் கூறி வழிப்படுத்தல் வேண்டும். மேலும் பிள்ளைகளுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளில் தலையிட்டு சமரசம் செய்து வைத்தல் அவர்கள் பொறுப்பாகும். அவ்வாறு இல்லாவிட்டால் சிறிய பிரச்சினைகள் பிற்காலத்தில் பெரிதாகி பகைமையினை ஏற்படுத்திவிடும்.

ஒரு பிள்ளைக் கோட்பாடு உருவாகிய பின் எதிர்காலத்தில் அத்தையோ, மாமியோ, சித்தப்பாவோ இருக்க வாய்ப்பே இல்லை. இத்தகைய உறவுகள் இந்தத் தலைமுறையின் கடைசி மிச்சங்கள் ஒன்று விட்ட அண்ணா, ஒன்று விட்ட அக்கா போன்ற உறவுகளெல்லாம் கூட முன்பு இருந்தன என்பது இன்று நினைத்துப் பார்க்கும் ஆச்சரியம். உறவுகள் இணைந்து வாழ்ந்தால் வாழ்க்கை எப்படி ஆனந்தமாக இருக்கும் என்பதை உடன்பாட்டு முறையில் சொன்ன இதிகாசம் ராமாயணம். அதில் நான்கு அண்ணன் தம்பியரிடையே இருக்கும் ரத்த பந்த உறவில் விரிசல் இல்லாத தன்மையைக் காண்கிறோம். உறவுகள் இணைந்து வாழாவிட்டால் வாழ்க்கை எப்படிச் சீரழியும் என்பதை எதிர்மறை நோக்கில் சொன்ன இதிகாசம் மகாபாரதம். சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் அண்ணன் தம்பிகளாய் இணைந்து வாழாததால் நேர்ந்த அவலங்களை அந்த இதிகாசத்தில் நெடுகப் பார்க்கிறோம்.

வயதான உறவுகளுக்கு எங்ஙனம் மரியாதைத் தர வேண்டும். நையாண்டி, நகைச்சுவை, பொறுப்பு ஆகியவைகள் பற்றி அறிய வாய்ப்பில்லாமல் பல குழந்தைகள் வளர்க்கப்பட்டு வருகின்றனர். ஒரு சில சிறு குடும்பங்களில் கணவன், மனைவி உறவுகளில் ஏற்பட்ட மனக்கசப்பினால் பிரிந்து தனியாக வாழும் குடும்பங்களும் இன்று உண்டு. அந்த மனக்கசப்பு குழந்தைகளின் மனங்களில் இளமையிலேயே மாறாத வடு. கூட்டுக் குடும்பங்களில் முதியவர்களின் அனுபவ பூர்வமான வழிகாட்டுதலும் இளம் கணவன் மனைவி உறவுகளில் சிறு விரிசல் ஏற்படும் போது உடனுக்குடன் அவை சரி செய்யப்பட்டுவிடும். அதேபோன்ற வேலைக்குச் செல்பவர்களின் குழந்தைகளை மற்ற உறவுகள் சுழற்சி முறையில் கவனித்தும் பிற தேவையற்ற அந்நிய கெட்ட நபர்களின் பழக்கத்திலிருந்து பல வகையில் காப்பாற்றிவிடலாம். சிலர் தங்களது வளர்ப்பு பிராணிகளிடம் காட்டும் அன்பைக் கூட தங்கள் நெருங்கிய உறவுகளிடம் செலவு செய்வதில்லை என்ற ஒரு கூற்றும் நிலவுகிறது மிகக் கொடுமை.

காரத்தை உணராத நாவினால் எந்நாளும் இனிப்பின் முழுமையான சுவை என்னவென்று உணர முடியாது. தோல்வியை காணாத ஒருவனால் எந்நாளும் வெற்றியின் முழுமையான மகிழ்ச்சியை உணர முடியாது. அதே போல தான் உறவுகளில் சண்டை அல்லது பிரச்சனைகளை எதிர்கொள்ளாத ஒருவனால் உறவின் முழு அன்பு மற்றும் பிரியத்தை உணர முடியாது.

தெய்வ வழிபாடும் - பலன்களும்....

* எலுமிச்சை, வெல்லம், அவல், மாதுளை, நெல், தேங்காய், பசும்பால் ஆகிய ஏழு வகை பொருட்களை சிவாலயத்தில் தானம் அளிப்பதால் சகல செல்வங்களும் கிடைக்கும்.

* கல்வி கலைகளில் சிறக்க, குழந்தைகள் நன்றாகப்படிக்க, பெருமாள் கோவில்களில் அஸ்த நட்சத்திரத்தன்று துளசி மாலை சாற்றி வழிபட வேண்டும். சரஸ்வதி தேவிக்கு புனர்பூச நட்சத்திர நாளில் அர்ச்சனை ஆராதனை செய்வதாலும் கல்வியில் சிறந்து விளங்கலாம்.

* சிவன் கோவில் வன்னி மரம், வில்வ மரத்தை 21 முறை வலம் வந்து நமது குறைகளைக் கூற, நல்ல பலன் கிடைக்கும். தீர்ப்புகள் சாதகம் ஆகும். இம்மரங்களுக்கு நாம் கூறுவதை கேட்கும் சக்தி உள்ளதாக ஒரு ஐதீகம் உண்டு.

* இரண்டு சர்ப்பங்கள் இணைந்தது போல் இருக்கும் நாகராஜா சிலைக்கு, வெள்ளிக்கிழமை ராகு காலத்தில், மஞ்சள் குங்குமம் வைத்து, செவ்வரளிப்பூ சாற்றி, அபிஷேகம் செய்து, நெய்தீபம் ஏற்றி, தம்பதிகள் பெயருக்கு அர்ச்சனை செய்தால் தம்பதிகள் ஒற்றுமையாக வாழ்வார்கள்.

* கொடிய கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீயோக நரசிம்மரையும், மற்ற கடன் தொல்லைகளுக்கு லட்சுமி நரசிம்மரையும் வழிபடுவது நல்ல பரிகாரம் ஆகும்.

* நரசிம்மரின் எந்த திருக்கோலத்தை தரிசித்தாலும் கடன் தொல்லைகள், பில்லி, சூனியம், ஏவல், திருஷ்டி, திருமண தடை விலகி நன்மை பெறலாம்.

* ஆலய திரிசூலத்தில் குங்குமம் இட்டு, எலுமிச்சை பழம் குத்தி வழிபட திருஷ்டி, செய்வினை தோஷம் நீங்கும்.

* சக்கரத்தாழ்வார் சன்னதியில் நெய்தீபம் ஏற்றி 1‘2 முறை, 48 நாட்கள், சுற்றி வழிபட தொழில், வழக்கு சாதகமாகும், பில்லி, சூனியம், ஏவல் நீங்கும், 21 செவ்வாய்க்கிழமைகளில் நெய்தீபம் ஏற்றி வழிபட கொடுத்த கடன் வசூலாகும்.

* அதேபோல் கொடுத்த கடன் வசூல் ஆக பைரவர் சன்னிதியில் தொடர்ந்து 8 செவ்வாய் கிழமைகளில் நெய் தீபம் ஏற்ற சகஸ்ர நாம அர்ச்சனை செய்ய வேண்டும்.

* ஜாதகப்படி சனி பகவானின் பாதிப்பு குறைய, திங்கட்கிழமைகளில் சிவபெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்ய வேண்டும். சனிக்கிழமைகளில் சனி பகவான் சன்னிதியில் தேங்காய் உடைத்து, இரண்டு மூடிகளிலும் நல்வெண்ணெய் ஊற்றி, எள்ளு முடிச்சு தீபம் ஏற்றவும், சிவன் கோயிலில் கால பைரவனையும், விஷ்ணு கோவிலில் சக்கரத்தாழ்வாரையும் வழிபட செய்வினை தோஷம் நெருங்காது.

* வெள்ளிக்கிழமைகளில் நவக்கிரக சுக்ரனுக்கு அகல் விளக்கில் கற்கண்டு போட்டு, அதில் நெய் தீபம் ஏற்றி வழிபட கணவன் – மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

* பிரதோஷ காலத்தில், ரிஷபாரூட மூர்த்தியாய், மகேசனை தேவியுடன் வழிபடுவோர் 100 அஸ்வமேத யாகங்களை செய்த பலனை பெறுவார்கள். அதிலும் ஈசானிய மூலையில் ஈஸ்வரனுக்கு காட்டப்படும் தீபாராதனையை பார்த்தால் எல்லா நோய்களும் வறுமையும் நீங்கும்.

* மாதா மாதம் உத்திர நட்சத்திரத்தன்று சிவனுக்கு தொடர்ந்து 11 மாதங்கள் பால் அபிஷேகம் செய்தால், விரைவில் திருமணம் நடைபெறும்.

* வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் துர்க்கைக்கு தாமரை தண்டு திரிபோட்டு நெய்விளக்கு ஏற்றி வழிபடதெய்வ குற்றம், குடும்ப சாபம் நீங்கும், ஹஸ்த நட்சத்திரத்தன்று துர்க்கைக்கு சிவப்பு பட்டு சாற்றி, குங்கும அர்ச்சனை செய்து, அக்குங்குமத்தை நெற்றியில் இட்டு வர உடனே திருமணம் நடைபெறும்.

* இரட்டைப் பிள்ளையருக்கு ரோகிணி நட்சத்திரத்தன்று சந்தனக்காப்பு செய்து வழிப்பட கடன் பிரச்சனை தீரும்.

* செவ்வாயன்று முருகப்பெருமானுக்கு நெய்விளக்கேற்றி வழிபட மூன்று மாதத்தில் வேலை கிடைக்கும்.

* விபத்துக்களில் இருந்து தப்பிக்க அவிட்ட நட்சத்திரத்தன்று முருகனுக்கு வேலில் எலுமிச்சை சொருகி அர்ச்சனை செய்யவும்.

* ருத்ராட்சம், சாளக்கிராமம், துளசி, வில்வம் உள்ள இடத்தில் இருந்து சுமார் 10 கி.மீ தூரத்திற்கு செய்வினை அணுகாது.

* புத்திர பாக்கியம் இல்லாதோர் 6 தேய்பிறை அஷ்டமிகளில் காலபைரவருக்கு சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் விரைவில் புத்திர பாக்கியம் கிட்டும்.

* வியாழக்கிழமைகளில் ஒரு நேரம் விரதம் இருந்து மாலையில் ஆலய தட்சணாமூர்த்திக்கு தொடர்ந்து நெய்விளக்கு ஏற்றி வர, விரதம் ஏற்ற 192 நாட்களில் கருத்தரிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.

* பெருமாள் கோவிலில் உள்ள கருடாழ்வார் சன்னிதியை சுற்றி வந்து நெய்விளக்கு ஏற்றி வழிபட சர்ப்ப தோஷம் கால சர்ப்ப தோஷம் நீங்கும்.

* வறுமையில் இருப்பவருக்கு தானம் கொடுத்தல், பூஜை நடக்காமல் இருக்கும் கோவில்களில் பூஜை நடக்க உதவுதல், அனாதைப் பிணங்களின் தகனத்திற்கு உதவுதல் ஆகிய மூன்றும் செய்தால் அசுவமேத யாகம் செய்ததற்கு சமம்.

* தொழில் தடை கணவன் – மனைவிக்குள் கருத்து வேறுபாடு நீங்க, வாழ்வில் நலம் பெற வெளிநாட்டு வேலை முயற்சி வெற்றி பெற, நல்ல காரியங்கள் நடைபெற பவுர்ணமி தோறும் நடைபெறும் சத்திய நாராயணா பூஜையில் கலந்து கொள்வது நற்பலன்களை தரும்.

* எத்தகைய கிரக தோஷமானாலும் தினமும் சுந்தர காண்டத்தில் ஒரு அத்தியாயம் பாராயணம் செய்வது மிக மிக நன்மை தரும், வாழை தண்டு திரியினால் வீட்டில் தீபம் ஏற்றினால் குலதெய்வ குற்றமும், குலதெய்வ சாபமும் நீங்கும்.

– தகவல்,

நெ.ஆ. சிவகுருநாதன்,

S.R. நகர், சிதம்பரம்.

நவ புலியூர்

வியாக்ரபாத முனிவருக்கு. புலிக்கால் முனிவர் என்ற பெயரும் உண்டு. அவர் மோட்சம் வேண்டி வழிபட்ட 9 ஆலயங்களும், "நவ புலியூர்" என்று அழைக்கப்படுகின்றன. இதனை பற்றி இங்கே பார்க்கலாம்.

பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) பஞ்ச பூதத் தலங்களில் ஆகாயத் தலம் இது. நடராஜ மூர்த்திக்கு தினசரி நடைபெறும் பூஜைகளில் பதஞ்சலி பூஜை, வியாக்ரபாதர் புஷ்பார்ச்சனையும் குறிப்பிடத்தக்கவை. திருஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர், மாணிக்கவாசகர் முதலியோர் முறையே தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு கோபுர வாசல் வழியாக சென்று வழிபட்ட தலம். திருநீலகண்ட நாயனார், திருநாளைப்போவார் (நந்தனார்), கூற்றுவ நாயனார், கணம்புல்ல நாயனார், மாணிக்கவாசகர் ஆகியோர் முக்தி பெற்ற தலம். திருத்தொண்டர் புராணம், பெரிய புராணம், பாட சேக்கிழாருக்கு இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, முழுப்புராணமும் பாடி அரங்கேற்றிய தலம்.

திருப்பாதிரிப்புலியூர் : கடலூர் புது நகர் ரெயில் நிலையத்திற்கு அருகிலுள்ள நடுநாட்டுத் தலம் இது. பாதிரி மரத்தைத் தலமரமாகக் கொண்டுள்ளதாலும், வியாக்ரபாதர் வழிபட்டதாலும் இதற்கு, 'திருப்பாதிரிப்புலியூர்' என்று பெயர். இறைவன் ஸ்ரீ பாடலீஸ்வரர், இறைவி பெரியநாயகி, உமா தேவியார் பாதிரி மரத்தின் அடியில் தங்கித் தவம் புரிந்து இறைவனை மணம் புரிந்த தலம். இத்தலத்தில் அப்பர் குருபூஜை சித்திரை சதய நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெறும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலம் இதுவாகும்.

எருக்கத்தம்புலியூர் : வெள்ளாற்றின் தென் கரையில் அமைந்துள்ள நடுநாட்டுத் தலம். இது ராஜேந்திர பட்டினம் என்றும் அழைக்கப்படுகிறது. வெள்ளெருக்கைத் தலமரமாகக் கொண்டதாலும், வியாக்ரபாதரால் வழிபட்டதாலும் "எருக்கத்தம்புலியூர்" என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீமுஷ்ணத்திற்கு அருகில் உள்ளது. இத்தல இறைவன் நீலகண்டேஸ்வரர், இறைவி நீலமலர்க்கண்ணி, திருஞானசம்பந்தர் பாடியது. சம்பந்தருக்கு யாழ் வாசித்த திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் அவதரித்த தலம் இதுவாகும்.

ஓமாம்புலியூர் : சோழ நாட்டு வடகரைத் தலமான இது காட்டுமன்னார் கோயில் அருகில் உள்ளது. சிதம்பரத்தில் இருந்து 30 கி.மீ. தொலைவில் தட்சிணாமூர்த்தியாக இருந்து உமாதேவிக்கு பிரணவப் பொருளை உபதேசித்ததாலும், வியாக்ரபாதர் வழிபட்டதாலும், 'ஓமாம்புலியூர்' என்று இத்தலத்திற்கு பெயர். உபதேசம் செய்த தட்சிணாமூர்த்தி மூல மூர்த்தியாக, சிலா ரூபத்தில், உயர்ந்த பீடத்திலிருந்து அருள்பாலிக்கிறார். நடராஜர் இருக்கும் இடத்தில் தட்சிணா மூர்த்தியும், தட்சிணாமூர்த்தி இடத்தில் நடராஜரும் உள்ளது கூடுதல் சிறப்பு. இறைவன் பிரணவ வியாக்ரபுரீஸ்வரர். துயர்தீர்த்தநாதர் என்ற பெயரிலும் இறைவி – புஷ்பலதாம்பிகை, பூங்கொடிநாயகி என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

சிறுபுலியூர் : மயிலாடுதுறையிலிருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது இத்தலம். இறைவன் வழித்துணைநாதர், மார்க்கபந்தீஸ்வரர், கங்காளநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். வியாக்ரபாதரும், பதஞ்சலி முனிவரும் சிறுபுலியூரை அடையும்பொழுது இருட்டிவிட்டது. அவர்களுக்கு சிவபெருமானும், அரங்கனும் காட்சி தந்து யாத்திரையை நிறைவேற்ற உதவியதாக வரலாறு. 108 திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்று. மூலவர் அருள்மாகடலமுத பெருமாள். இவர் புஜங்க சயனக்கோலத்தில் அருள்கிறார். தாயார் திருமாமகள் நாச்சியார். வியாக்ரபாதர் பெருமாளைப் பூஜித்த வண்ணம் திருவடியில் அமர்ந்துள்ளார்.

அத்திப்புலியூர் : கீழ்வேளூருக்கு மேற்கே 5 கி.மீ தொலைவில் உள்ளது இந்த திருத்தலம். 'அத்தி' என்றால் யானை என்றும் பொருள் தரும். யானையும் வியாக்ரபாதரும் (புலி) வழிபட்டதால் இதற்கு 'அத்திப்புலியூர்' என்று பெயர் வந்தது. இத்தல மூலவர் – சிதம்பரேஸ்வரர் தெற்கு நோக்கி அருள்பாலிக்கின்றார். இறைவி – சிவகாமசுந்தரி பதஞ்சலி முனிவருக்கும், வியாக்கிரபாதருக்கும் அகத்தியருக்கும் இறைவன் தன்னுடைய திருமணக்காட்சி அருளிய தலம் இது. மூல லிங்கத்திற்குப் பின்புறம் சோமாஸ்கந்தர் உள்ளார். இத்தலம் 'தட்சிண கேதாரம்' என்று போற்றப்படுகிறது.

தப்பளாம்புலியூர் : திருவாரூருக்குத் தென்கிழக்கே 5 கி.மீ தொலைவில் உள்ளது. வியாக்கிரபாதருக்கும், மண்டூக மகரிஷிக்கும் இறைவன் அருள்பாலித்த தலம். வியாக்கிரபாதரின் புலிக்கால், புலிக்கைத் திருமேனியை இறைவன் நீக்கியதாக வரலாறு. பதஞ்சலி, வியாக்கிரபாதர், மண்டூக மகரிஷி மூவருமே, நடராஜரின் திருநடனக் காட்சியைக் கண்டுகளித்த தலம். நடராஜ மூர்த்தமாக இருக்கிறது. இறைவன் – வியாக்ரபுரீஸ்வரர், சுயம்பு மூர்த்தியாக இருக்கிறார். இறைவி பெயர் – நித்யகல்யாணி.

பெரும்புலியூர் : திருவையாற்றுக்கு வடமேற்கே 5 கி.மீ தொலைவில் உள்ளது. வியாக்ரபாதர் வழிபட்ட தலம். இறைவன் – வியாக்ரபுரீஸ்வரர், இறைவி – சவுந்தர நாயகி, கல்லாலான நடராஜ மூர்த்தம் இங்கு உள்ளது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம்.

கானாட்டம்புலியூர் : சிதம்பரத்திற்குத் தென்மேற்கே 30 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. சிதம்பரத்தில் இருந்தும், ஓமாம்புலியூரில் இருந்தும் இக்கோவிலை அடையலாம். பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம். இறைவன் – பதஞ்சலிநாதேஸ்வரர், இறைவி – கண்ணார்குழலி சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்றது.

நெ.ஆ. சிவகுருநாதன்,
S.R. நகர், சிதம்பரம்.

வாழ வழியுண்டு (தொடர்ச்சி)

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது!

இல்வாழ்க்கையானது தம்பதிகளிடையே பாசமும், பற்றும், நேசமும் நிறைந்ததாக விளங்க வேண்டும். அவ்வகையில் வாழ்பவர்களின் வாழ்க்கையே எல்லார்க்கும் வழிகாட்டியாகவும், அர்த்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் அமையும். குடும்பத்தலைவிதானும், தன்னைச்சார்ந்த குடும்பமும், சுற்றியுள்ள சமூகமும் நலம் பெறவும், வளம் பெறவும் செய்யும் வகையில் 'இல்லத்தரசி' என்ற பெயருக்கு ஏற்ப தன் குடும்ப சுமையை சுமக்கும் பொறுப்புள்ள தலைவியாகிறாள். அதனால்தான் "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்றார் கவிமணி. இவ்வகையில் உயர்நிலை பெற்ற பெண்களால் தயாரிக்கப்படும் வித்தியாசமான, ருசியான உணவு வகைகள் குறித்தும், வேலைக்கு போகும் பெண்களுக்கு பயனுள்ள வகையில் சமையலுக்குத் தேவையான பொருட்கள் தயார் செய்து விற்பனைக்கு அனுப்புதல் பற்றியும், மற்றும் இனிப்பு, கார வகைகள் செய்யும் முறை பற்றியும் பார்க்கலாம்.

பொடி வகைகள் தயாரித்து, அளவு வாரியாக டப்பாக்களில் அடைத்து டப்பாவின் மேல் தயாரிக்கும் இடத்தின் பெயர், பொடியின் பெயர், அளவு, விலை என்ற விபரங்கள் எழுதிய ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும். உதாரணமாக முருகன் இட்லி பொடி, எடை : 200g, விலை : ரூ. 30,00 மற்றும் உங்களால் தயாரிக்கப்படும் பொடி வகைகள் பெயர் போன்ற தகவல்கள் எழுதலாம். இட்லி பொடிக்கு கட்டிப் பெருங்காயம் வறுத்து போட்டால் பொடி வாசனையாக இருக்கும். பவுடர் போடக்கூடாது. அடுத்து ரவா போல நொர, நொரப்பாக இல்லாமல் மாவுப்போல நைசாக இருக்க வேண்டும். பூண்டு பொடிக்கு அவரவர்க்கு தேவைப்படும் காரத்திற்கு ஏற்ப மிளகாய் எடுத்துக் கொள்ளலாம். மிளகாய் வறுத்த பின் அதே எண்ணெயில் பூண்டையும் லேசாக வறுக்க வேண்டும். பூண்டின் தலையும், காம்பையும் கிள்ளினால் போதும். தோல் முழுவதும் நீக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

சாதத்தில் பிவைந்து சாப்பிடும் வகையான துவரம் பருப்பு பொடி, கருவேப்பிலை பொடி, கொத்தமல்லி பொடி, மிளகு பொடி, தேங்காய் பொடி, (தேங்காய் துருவல், உளுத்தம் பருப்பு, மிளகாய், பெருங்காயம் சேர்த்து) போன்ற பொடி வகைகள் தயாரித்து விற்பனைக்கு அனுப்பலாம். வேலைக்கு போகும் பெண்கள், சமைக்க முடியாத வயதானவர்கள், மற்றும் வெளியில் சென்று விட்டு வீட்டிற்கு திரும்புவதற்கு தாமதமாகிவிடும் பட்சத்தில் இத்தகைய பொடி வகைகள் பெரும் உதவியாக இருக்கும். சாதம் மட்டும் வைத்துக்கொண்டு அன்றைய மதிய சாப்பாட்டை முடித்துவிடலாம். தயாரிக்கப்படும் விதம் தெரிய வேண்டுமானால் தொலைபேசி மூலம் கேட்டு தெரிந்துக்கொள்ளவும். பொடி சாதத்திற்கு தொட்டுக்க (side dish) அப்பளம், கருடம் (வத்தல்), போன்றவையும் தயாரித்து பொடியுடன் சேர்த்து விற்பனை செய்யலாம். அரிசி அப்பளம், சோத்து அப்பளம், உளுந்து அப்பளம், அப்பள பூ, கிள்ளி வைத்த கருடம், பிழிந்த கருடம் என (அரிசி கூழில்) தயாரித்து விற்பனை செய்யலாம்.

ஒரு சின்ன கதை : எங்கள் தெருவில் எழுபத்தைந்து வயது கடந்த பாட்டி, அவர் தன் காலில் நிற்க வேண்டும், எவன் கையையும் எதிர்பார்க்கக் கூடாது என்ற வைராக்கியத்தில் அரிசி அப்பளம் தயார் செய்து, பாலித்தின் கவரில் 100 அப்பளம் கொண்ட ஒரு பாக்கெட் ரூ. 60 மட்டுமே என விலைக்கு தருவார்கள். கடைக்கு வியாபாரத்திற்கு மொத்தமாக பாக்கெட் வாங்கி சென்று விடுவார்கள். ஊரிலும் வெளியிலிருந்து வரும் விருந்தினர்கள் பாக்கெட் வாங்கி செல்வார்கள். போன் மூலம் அப்பளம் அனுப்ப சொல்லி தகவல் வரும். அந்த அளவில் எல்லாரும் விரும்பக் கூடிய வகையில் அப்பளம் ருசியாக இருக்கும். தன்னால் முடியும் என்ற நம்பிக்கையோடு செயல்படுவார்கள். அவரை பார்க்கும் போது இந்த பாட்டி கோவில் கட்டி கும்பிட வேண்டிய தெய்வம் என்று நினைப்பேன்.

Ok, இதற்கு பிறகு புதுமையான வித்தியாசமான பெயரில் தயாரிக்கப்படும் பலகாரங்கள் சிலவற்றை பார்க்கலாம்.

பால் பொங்கல் : பச்சரிசி ஒரு டம்ளர் எடுத்து பொன்னிறமாக வறுத்து கழுவி வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு டம்ளர் தண்ணீர் பொதிக்க வைத்து, அரிசியை நீரில் கொட்டி வேக வைத்து, அரிசி பாதிக்கு மேல் வெந்த பின் (நெத்து பதமாக) இரண்டு டம்ளர் பாலை கொஞ்சம், கொஞ்சமாக ஊற்றி கிளற வேண்டும். அரிசி நன்றாக குழைவாக வெந்ததும், தேவையான அளவு வெல்லம் போட்டு, ஏலக்காய் பவுடரும் போட்டு கிளறி இறக்கிய பொங்கலில், திராட்சை, முந்திரி பருப்பு (சிறு சிறு துண்டுகளாக உடைத்த) இரண்டையும் நெய்யில் வறுத்து போட வேண்டும். பால் பொங்கல் தயார். கிண்ணத்தில் எடுத்து ஸ்பூன் போட்டு கொடுத்தால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.

கேரட் சாதம் : பச்சரிசியை உதிரிப்பதத்தில் வடித்துக்கொண்டு அகலமான பாத்திரத்தில், கொட்டி ஆற வைக்க வேண்டும். கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகம், கடலைப்பருப்பு, இவற்றை தாளித்து சாதத்தில் போட வேண்டும். அதனுடன் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் கேரட் துருவல் மூன்றையும் வதக்கி, உப்பு பவுடர், மசாலாத்தூள் போட்டு அதையும் சேர்த்து வதக்கிய பின் சாதத்தில் கொட்டி கிளற வேண்டும். வறுத்த நிலக்கடலையை ஒன்றிரண்டாக உடைத்து சாதத்தில் போடவும். கருவேப்பிலை, கொத்தமல்லித் தழையை மேலே தூவி அழகுப்படுத்தலாம். ருசியான சத்தான கேரட் சாதம் சாப்பிட தயாராகிவிட்டது.

முந்திரி பக்கோடா : முந்திரி பருப்பை பொடியாக நறுக்கி அதனுடன் கடலை மாவு ஒரு பங்கு, அரிசி மாவு இரண்டு பங்கு, தேவையான காரப்பொடி, லேசாக நசுக்கிய சோம்பு, ஒரு ஸ்பூன் உப்பு பவுடர் போட்டு, மாவை நன்றாக கலந்து விட்டு காய்ச்சிய நெய் இரண்டு, மூன்று ஸ்பூன் ஊற்றி பொடி செய்த மல்லித்தழை, கருவேப்பிலையை தூவிவிட்டு, தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து, பின் சூடான எண்ணெயில் கிள்ளி போட்டு பொன்னிறமாக வறுத்து எடுக்க வேண்டும். கரகரப்பான, சுவையான முந்திரி பக்கோடா சாப்பிட கிடைத்துவிட்டது.

தேங்காய் பால் பாயசம் : பச்சரிசி ஐம்பது கிராம் எடுத்து நீரில் ஊறவைத்து பதினைந்து நிமிடம் ஊறிய பின், இரண்டு மூடி தேங்காய் பவுடருடன், ஊறிய அரிசியை சேர்த்து மிக்ஸியில் நைசாக அரைக்க வேண்டும். பாத்திரத்தில் ஒரு லிட்டர் பாலுடன் அரை லிட்டர் தண்ணீர் ஊற்றி, அரைத்து வைத்துள்ள விழுதையும் சேர்த்து அடுப்பில் வைத்து விடாமல் கிளற வேண்டும். பத்து நிமிடம் கிண்டிய பின் தேங்காயும், அரிசியும் வெந்து பழுப்பு நிறத்தில் (கஞ்சி) கூழ் போல் வரும். 300 கிராம் சீனியை சேர்த்து கொதிக்க வைக்க வேண்டும். ஏலக்காய் பவுடர் (10 ஏலக்காய்) ஜீனியுடன் சேர்த்து மிக்ஸியில் அடித்து கஞ்சியில் போட வேண்டும். இறக்கி வைத்த பாயசத்தில் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிய முந்திரி பருப்பு, மற்றும் காய்ந்த திராட்சை இவற்றை நெய்யில் வறுத்து போட வேண்டும். பாயசம் குடிக்கும் விதத்தில் (Liquid) இருக்கும். டம்ளரில் ஊற்றி குடிக்க வேண்டும். திருமணமான புது தம்பதியினருக்கு விருந்து வைக்கும் போது, மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள், திருமண நாள் கொண்டாடும் போது தேங்காய் பால் பாயசம் ஏற்றதாக இருக்கும்.

பாதாம் பால் போளி : மைதா மாவு 250 கிராம், துளி உப்பு, நெய் சேர்த்து கலந்து, தண்ணீர் விட்டு சப்பாத்தி மாவுப்போல பிசைந்து, ஈரத்துணியால் மூடி பதினைந்து நிமிடங்கள் ஊற வைத்து விட வேண்டும். திரும்ப மாவை மீண்டும் பிசைந்து, சிறு, சிறு உருண்டைகளாக்கி, மெல்லிய சப்பாத்தியாக இட்டு வைக்க வேண்டும். அரை லிட்டர் பாலுடன் 250 கிராம் ஜீனி சேர்த்து காய்ச்சிய பின் அதில் பாதாம் மிக்ஸ் பவுடர் (100g) போட்டு கலக்கி தனியாக ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் வாணலியில் எண்ணெய் ஊற்றி காயவிட்டு, இட்டு வைத்துள்ள சப்பாத்திகளைக் கரகரப்பாக பொரித்து சூடான பாதாம் பாலில் போட்டு எடுத்து, இரண்டாக மடித்து தட்டில் பரப்பி வைத்துக் கொள்ள வேண்டும். திரும்ப பரிமாறும் போது மேலும் சிறிது பாதாம் பாலை ஊற்றி, நன்கு ஊரிய நிலையில் சாப்பிட வேண்டும். இதனை சூடாகவும் சாப்பிடலாம், அல்லது ஃபிரிட்ஜில் வைத்து குளிர்ச்சியாகவும் சாப்பிடலாம்.

நாம் வழக்கமாக கடலை பருப்பு, வெல்லம் சேர்த்து பூரணம் தயார் செய்து, மைதா அப்பளத்தின் நடுவில் வைத்து மூடி போளி தட்டி தோசைக் கல்லில் நெய் தடவி போட்டு எடுப்போம். அதையே வெல்லம் காய்ச்சி அதில் தேங்காய் துருவல் (நைசாக பவுடராக மிக்ஸியில் அடித்து) போட்டு, ஏலக்காய் சேர்த்து தெரட்டி பால் போல கிண்டி, ஆறிய பின் உருண்டைகளாக உருட்டி, மைதா அப்பளத்தின் நடுவில் வைத்து மூடி போளி தட்டி தோசைக்கல்லில் நெய் தடவி போட்டு எடுக்கலாம். இந்த போளி நேரம் அதிகம் எடுக்காமல் நினைத்த மாத்திரத்தில் செய்யலாம். தேங்காய் போளி என்று பெயர். காய்ச்சிய நெய் ஆற விட்டு விழுதாக தொட்டு சாப்பிட ருசியாக இருக்கும்.

நாம் பார்த்து பார்த்து சுவையாக சமைத்த சாப்பாடாகட்டும், பலகாரமாகட்டும், சரியாக உள்ளதா என்று ருசி பார்ப்பதற்கு முன், இறைவனுக்கு படைத்து நிவேதனம் செய்து, கடவுளே இந்த சாப்பாடு, இந்த பட்சணம், சரியாக அமைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, நீர் விளாவிய பிறகே நாம் சாப்பிட்டு பார்க்க வேண்டும்.

நன்றியுடன்

– இரா. திலகம், வையூர்.

9789412635

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : ஆண்டாள், சித்ரா, மீனா, வசுமதி, கோமதி, பிரியா, கௌரி, தீபிகா.

இடம் : அண்ணா சதுக்கம்.

மாலை 5 மணி அளவில் அனைவரும் அண்ணாவின் நினைவிடத்தில் கூடி, சில நிமிடத்துளிகள் அண்ணா அவர்களின் நினைவில் ஒன்றி, பின் கடற்கரைக்குச் சென்றனர். அவர்களது கச்சேரி களைகட்டத் தொடங்கியது.

மீனா : இந்த மாதம் அறிஞர் அண்ணாவோட 116 வருடப் பிறந்த நாள் செப்டம்பர் 15–ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்த இடத்துக்கு வந்ததும், அவரைப் பற்றிய ஞாபகங்கள் வருது.

தீபிகா : எனக்குக் கூட வருது. எவ்வளவு எளிய தலைவர்! கிண்டலாக பதிலளிப்பதில் வல்லவர்.

சித்ரா : எங்கள் தாத்தா, அண்ணாவே எதிர்பார்க்காத வெற்றி 1967 தேர்தலில் கிடைத்தது என்றும், அவர் பதவியேற்றபோது, அதிகாரிகளிடம் எனக்கு எதுவும் தெரியாது; தப்பா ஏதாவது செய்தால் சொல்லித்தாருங்கள் என்றார் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

பிரியா : அது மட்டுமல்ல அவரது இறுதி ஊர்வலம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதாம். அதற்கு சென்னைக்கு வந்தவர்கள் சுமார் 1½ கோடி மக்கள். கொள்ளிடம் பாலத்தில் இரயிலின் மேல் பயணித்தவர்கள் சிலர் இறந்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

தீபிகா : அவரைப் பற்றி பேசினோமானால், நேரம் பத்தாது. ஆண்டாளக்கா! இந்த மாத பண்டிகைகளை ஆரம்பிப்போம்கா!

ஆண்டாள் : இந்த மாதம் நமது முக்கிய பண்டிகையான தீபாவளி அக்டோபர் 31–ஆம் தேதி வருது. கிருஷ்ணபகவான் நரகாசுரனை அழித்த தினத்தையே தீபாவளியாக கொண்டாடுகிறோம். தீபாவளியை முதன் முதலில் கொண்டாடியவன் நரகாசுரனின் மகன் பகதத்தன் ஆவான். அதிகாலை எழுந்து எண்ணெய் தேய்த்து குளித்து, புத்தாடை அணிந்து பட்டாசு, வெடி வெடித்து கொண்டாடி நிறைய இனிப்பும், காரமும் செய்து பலருக்கும் கொடுத்து மகிழ்வோம்..

கோமதி :எல்லார் வீட்லேருந்தும் நமக்கும் பலகாரம் தருவார்கள்; நாமும் அவர்களுக்கு நம்ம வீட்லே செய்ததைக் கொடுத்து, தீபாவளி வாழ்த்துக் கூறி வருவோம்.

வசுமதி : வட மாநிலங்களில் ராமபிரான் 14 ஆண்டுகள் காட்டிலே இருந்துவிட்டு, அயோத்தி திரும்பும் நாளே தீபாவளி, தீபாவளின்னா தீப வரிசை. எல்லா வீட்லேயும் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து மகிழ்வர்.

சித்ரா : மும்பையில் 5 நாள் தீபாவளி! தன்தெராஸ், சோட்டி தீவாளி, தீவாளி, லட்சுமி பூஜை கடைசி நாள் Bhai Dooj என்பர். தன்தெராஸ் அன்று தங்கம் வாங்கினால் பெருகும் என்பது ஐதீகம். லட்சுமி பூஜை அன்று வியாபாரிகள் புதுக்கணக்கு தொடங்குவர். மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் பூஜை போடுவர்.

வசுமதி : மும்பையே ஜே! ஜே! என இருக்கும். கடைசி நாள் சகோதரிகள் சகோதரர்களின் வீட்டுக்குப் போய் பரிசளித்து, விருந்துண்டு வருவர். இப்பல்லாம் டில்லியில் சீனப் பட்டாசு வெடிப்பதை குழந்தைகளே விரும்புவதில்லை.

ஆண்டாள் : நம்ம ஊர்லேயும் முன்னைமாதிரி போட்டிபோட்டுக்கிட்டுவெடிவெடிப்பதுகுறைஞ்சுடுச்சு. ஆனா கந்த சஷ்டி விழா மிகச்சிறப்பாக நடைபெறுது. நவம்பர் 7 ஆம் தேதி சூரசம்ஹாரம் திருச்செந்தூரில் மிக கோலாகலமாக நடைபெற உள்ளது. எல்லா முருகன் கோவில்களிலும் இப்ப சூரசம்ஹாரம் நடக்குது. சென்னை பெசன்ட்நகர் அறுபடை வீட்டிலும் சூரசம்ஹாரம் மிகச் சிறப்புடன் நடைபெறுவதாக எனது தோழி கூறினாள்.

பிரியா : நவம்பர் 15–ஆம் தேதி சிவன் கோவில்களில் அன்னாபிஷேகம் நடக்க உள்ளது. கங்கை கொண்ட சோழபுரம் அன்னாபிஷேகம் மிகவும் சிறப்பானது. அநேக சிவன் கோவில்களில் அன்னாபிஷேகம் நடைபெறும். அது முடிந்து அன்னதானமும் வழங்குறாங்க.

கோமதி :அடுத்த செய்திகளுக்குப் போவோமா? அமெரிக்காவில் ஜியார்ஜியா உளவியல் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில், இசை வாயிலாக நாம் இழந்த நினைவுகளை மீட்டெடுக்க முடியும் என்பதுடன், நினைவாற்றலை அதிகரிக்கவும் இசை உதவும் என அறிந்துள்ளனர் என சொல்றாங்க. எனக்கு ஒரு பழக்கம். தூங்குறதுக்கு முன்னே பாட்டு கேட்பது எனக்கு ரொம்ப பிடிக்கும்.

வசுமதி : போன முறையே எதுவும் வியாதி பத்தி கூறலையே என ஆண்டாளக்கா சொன்னாங்க. இப்ப நான் இதய தமனிகளைத் தாக்கும் 'கவசாகி' பற்றி சொல்றேன். கவசாகி என்பது சிறிய, நடுத்தர அளவு உள்ள ரத்தக் குழாய்களில் அழற்சியையும், வாய், மூக்கு, தொண்டையிலுள்ள மியூக்கஸ் அடுக்கிலும் வீக்கத்தையும் ஏற்படுத்தும். கைக்குழந்தையிலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தையைப் பாதிக்கும் நோய் இது.

ஐந்து நாட்களுக்கு மேல் தொடர் காய்ச்சலுடன், நாக்கு, தொண்டை, உதடுகள் சிவத்தல், கைகள், பாதங்களில் வீக்கம் இருப்பின், கவசாகியின் அறிகுறிகளாக இருக்கலாம். இந்நோய் குறித்த விழிப்புணர்வு இன்மையால் இது தாக்குவதே தெரிவதில்லையாம்.

கோமதி :ஆமாம்பா! இது மாதிரி ஒரு வியாதி இருக்குன்னே எங்களுக்குத் தெரியாது.

கௌரி : வியாதி பற்றி கூறிட்டீங்க! இப்ப நான் ஒரு மருந்து பற்றி சொல்றேன். மனித இனத்தை அழிவிலிருந்து காக்கும் அரிய மருந்து க்ளைப்லோசின். ஐந்து முக்கிய பிரச்சனைகளான சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, ஹார்ட்ஃபெயிலியர், கிட்னி ஃபெயிலியர், மாரடைப்பு ஆகியவற்றிலிருந்து நம்மைக் காக்க பேருதவியாக இருக்கும் மருந்து டாபாக்லைப்லோசின் என்ற டாக்சுலா. இதய மாற்று அறுவை சிகிச்சை, ஃபேஸ் மேக்கர், டீபைப்ரிலேட்டர் போன்ற கருவிகளைப் பொருத்திக் கொள்ள முடியாதவர்களுக்கு, இந்த மருந்து பேருதவியாக உள்ளது என கூறுகிறார்கள்.

பிரியா : குழந்தைகள் குட்டிக்கரணம் போடுவார்கள்; குரங்காட்டி குரங்கை, குட்டிக்கரணம் போட வைப்பான். இதெல்லாம் ஜுஜுபி.

ஆண்டாள் : ஏய்! நீ என்ன சொல்ல வர்றே?

பிரியா : ஒண்ணுமில்லக்கா! குட்டிக்கரணத்தில் கில்லாடியாண பூச்சி குளோபுலர் ஸ்பிரிங்டெயில் ஆகும். இந்த பூச்சி ஒரு வினாடியில் ஆயிரத்தியொரு பங்கு நேரத்தில் குட்டிக்கரணம் அடிக்கிறது. தலைகீழாக குதிப்பதற்குள் தனது உடலைக் காற்றில் ஒரு நொடிக்கு 368 சுற்றுகள் சுற்றி விடுகிறதாம். ஒரு சிறிய பூச்சிக்கு இயற்கை இப்படி ஒரு ஆற்றலைக் கொடுத்திருப்பது ஆச்சரியமே!

மீனா : நானும் ஒரு புது வகை மீனைப் பற்றி சொல்றேன். ஜப்பானில் இதுவரை அறியப்படாத புதிய இனத்தைச் சேர்ந்த 10 செ.மீ நீளமுள்ள நட்சத்திர மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத இந்த புது கண்டுபிடிப்பு உயிரியல் ஆர்வலர்களை உற்சாகப்படுத்தி உள்ளதாம்.

கோமதி : இன்னைக்கு பேப்பர்ல இலங்கைத் தேர்தல் செய்தி படிச்சேன். பிரேமதாசா, ரனில் விக்ரமசிங்கே போன்றோர் தோற்று, புது அதிபர் இன்று பதவியேற்றுள்ளார். நீங்க யாராவது செய்தி பார்த்தீங்களா?

சித்ரா : நான் படிச்சேன்பா! இலங்கையின் 9 ஆவது அதிபராக என்.பி.பி. எனப்படும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி சார்பில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கொள்கையைப் பின்பற்றும் ஜே.வி.பி. எனப்படும் ஜனதா விமுக்தி பேரமுனா கட்சியின் அனுரா குமார திசநாயகே என்பவர் அதிபராக பதவியேற்றுள்ளார். இலங்கை அதிபர் தேர்தல் விருப்ப ஓட்டு அடிப்படையில் நடைபெறுகிறது. அதன்படி வாக்காளர்கள் வேட்பாளர் பட்டியலில் இருந்து மூன்று பேரை தேர்வு செய்வர். இதில் 50% க்கு மேல் வாக்குகள் பெறுபவர் வெற்றி பெறுவர்.

கோமதி :சப்போஸ் ஒருத்தரும் 50% வாக்குகள் பெறலைன்னா?

சித்ரா : சொல்றேன்! எந்த வேட்பாளரும் 50% வாக்குகள் பெறாத நிலையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பமாக வாக்காளர்கள் தேர்வு செய்த ஓட்டுக்கள் எண்ணப்படும். அந்த ஓட்டுகள் முதல் கட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த வேட்பாளர்களின் வாக்குகளுடன் சேர்க்கப்படும். அவ்வகையில் 55.89% வாக்குகளைப் பெற்ற அனுராகுமார திசநாயகே அவர்கள் அதிபராகி இருக்கிறார்.

மீனா : System நல்ல இருக்குல்லே!

ஆண்டாள் : Time ஆயிடுச்சு! இன்றைக்கு கோவில் செல்ல இயலாது. மழைக்காலம் ஆரம்பிக்கப் போகுது! எல்லோரும் முகக் கவசம் அணிந்து கொள்வது நல்லது என நமது அரசு கூறியுள்ளது. நீரைக் காய்ச்சி குடிப்பதும் நல்லதுப்பா!

தீபிகா : மழைக்காலம் என்றவுடன் குடையைப் பற்றி ஒன்று கூறி இந்த மீட்டிங்கை முடித்துக் கொள்வோமா?

கௌரி : அக்கா! கோவில் இல்லாமலா? நான் கும்பகோணத்தில் தரிசித்த ஓரிரண்டு கோவில்பத்தி சொல்றேன்க்கா! புரட்டாசிமாசம் இல்லையா? அதனாலே முதல்லே பெருமாள் கோவில் போவோம். ஆதிவராகர் ஆலயம். பிரளய காலத்திற்கு முன்பே, இப்பெருமாள் இங்கு எழுந்தளியிருந்ததால், ஆதி வராகர் எனப்படுகிறார். எம்பிராட்டி அம்புஜவல்லித் தாயார், கருவறையில் பூமாதேவியை இடது மடியில் அமர்த்திய கோலத்தில் பெருமாள் காட்சியளிக்கிறார். தினமும் இவருக்கு அர்த்தசாம பூஜையின் போது கோரைக்கிழங்கு மாவு உருண்டையை நைவேத்யம் செய்து, அடுத்த நாள் காலை பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்குகிறார்கள். பூமியை மீட்டு வந்த பெருமாள் என்பதால், பூமிக்குக் கீழே விளையும் கிழங்கு படைக்கப்படுகிறது. அமர்ந்த கோலத்தில் இருக்கும் பெருமாளுக்கு முன்னால், உற்சவர் நின்ற வண்ணம் தனது இடது பாதத்தை ஆதிசேஷன்

மீது வைத்த வண்ணம் காட்சி அளிக்கிறார். மற்றும் வராக சாளக்கிராமமும் உள்ளது. இதில் சங்கு, சக்கர ரேகைகள் உள்ளன. தினமும் இதற்கு பாலாபிஷேகம் செய்கிறார்கள். இன்னொரு கோவில் மடத்துத் தெரு படைவெட்டி மாரியம்மன். மிகுந்த சக்தி வாய்ந்த அம்மன் என்பது அங்கிருந்த மக்களின் மூலமும், தெருவில் செல்லும் பேருந்துகளை ஓரிரு நிமிடம் நிறுத்தி, நடத்துனர்கள் வந்து காணிக்கை செலுத்துவதன் மூலமும் அறிந்து கொண்டேன். சிறிய கோயில்; அழகான அம்மன்; பின்னால் பெரிய சுதை சிற்பம். அது போன்றே பிரகாரத்தில் பச்சைக்காளி, பவளக்காளி அம்மன்களின் அழகிய சுதைச் சிற்பங்கள் இருந்தன. அங்கு தரிசித்த போது ஒரு different உணர்வு கிடைத்தது என்பது உண்மை.

பிரியா : நான் நிறைய time கும்பகோணம் போய் இருக்கேன் இந்த ரெண்டு கோவிலைப் பார்த்ததில்லைப்பா. அடுத்த time கட்டாயம் பார்க்கணும்பா. தீபிகா! நீ சொல்லுப்பா.

தீபிகா : லத்தீன் மொழியில் நிழல் என குறிப்பிடப்படும் சொல்லான அம்ப்ரா என்பதில் இருந்து அம்பர்லா வந்துள்ளது. பண்டைக்காலத்தில் தமிழரும், சீனரும் குடையைப் பயன்படுத்திய வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

ஆண்டாள் : ஆமாம்பா! வாமன அவதாரத்தில் வாமனர் ஒரு தாழை மடல் குடையுடன் காட்சி தருவார். சுவாமி புறப்பாடு, அரசர்களுக்குக் குடைப்பிடிக்கும் பழக்கம்தான் அக்காலத்திலேயே இருந்ததே!

தீபிகா : இப்ப இருக்கிற குடையின் பிறப்பிடமாக எகிப்துதான் கருதப்படுகிறது. 1750–ல் ஜோனாஸ் ஹான்வே என்ற ஆங்கிலேயர் குடையைத் தயாரித்து விற்பனையைத் தொடங்கினார். முதல் குடை விற்கும் கடை ஜேம்ஸ் ஸ்மித் அண்ட் சன்ஸ் ஆகும். லண்டனில் 1830–ஆம். வருடம் தொடங்கப்பட்ட கடை. குடையில் இரும்பு கம்பி பொருத்தியுள்ள தற்போதைய வடிவைக் கண்டறிந்தவர் சாமுவேல்ஃபோக்ஸ். ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 10–ஆம் தேதி உலக குடை தினமாக கடைபிடிக்கப்படுகிறது. அவ்வளவுதான்.

மீனா அடுத்த மாதம் யாராவது ஒருவர் வீட்லேதான் சந்திக்கணும். ஜனவரி வரைக்குமே வீட்லே meeting ஐ வைச்சுப்போம்.

சித்ரா : அடுத்த மாதம் எங்க வீட்ல வைச்சுக்கலாம்.

எல்லோரும் ஒரு மனதாக Ok கூறி, சுடச்சுட பஜ்ஜி சாப்பிட்டு, மகிழ்ச்சியுடன் கலைந்தனர்.

நன்றி ! வணக்கம்!

கலைவாணியைப் பூஜிக்கிறேன்!

வரலாறு படைக்கலாம் வாவென
'வாசிப்பு' என்னை அழைத்தது!
"சரித்திரம் உன்னையும் பேசும்" என
புத்தகம் எனக்கு உணர்த்தியது!

வள்ளுவ நதியில் நீராடினேன்
வாழ்க்கை புனிதமானது!
தெள்ளு தமிழ்ப் புலவனால்
தெளிந்த மனம் அடைந்தேன்!

ஆத்திச்சூடியும் கொன்றைவேந்தனும்
என்னுள் அறம் வளர்த்தது!
பார்த்தீபன் கண்ணனிடம்
'பகவத் கீதை' படித்தேன்!

பாரதியைப் படிக்கையில்
விலங்குகள் நொறுங்கின!
பாரதிதாசன் என்னைக்
பைந்தமிழின் காவலனாக்கினான்!

கம்பனும் கண்ணதாசனும்
கவிதை எழுதச் சொல்ல
இலக்கியம் என்னை
இனிமையாய்ச் செதுக்கியது!

இரயில் பயணங்களில்
புத்தகங்கள் வாசிக்கிறேன்!
நடை மேடைகளில் அதனை
மனப் பாடமாக்குகிறேன்!

குதிரைச் சவாரியில் படித்த
நெப்போலியனைப் போல
கோவில் பிரகார வரிசையில்
புத்தகத்தோடு நகர்ந்திருக்கிறேன்!

பத்துப் புத்தகங்கள் படித்தபின்
பதினோராவது புத்தகமானேன்!
காலத்தை வென்று நிற்கும்
கவிதை நூல் யாத்ததில் மகிழ்ச்சி!

காத்திருப்பு நேரங்களெல்லாம்
பூத்திருக்கும் விழிமலராய்
கலைவாணியை பூசிக்கிறேன்!
காலமெல்லாம் நேசிக்கிறேன்!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்.

9578286891



சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

தினமும் படித்தால் முட்டாள்கூட அறிவாளி ஆகலாம்.கல்வி அறிவே அனைவருக்கும் ஆபரணம்.

ஆரோக்கியத்தைப் பாதிக்கும் உணவுப்பொருட்கள்

அண்மைக் காலங்களில் பாக்கெட்டுகளில், பாட்டில்களில் அடைக்கப் பட்ட ஜங்க் ஃபுட், ஃபாஸ்ட் ஃபுட்(fast food / junk food) என எண்ணற்ற பதப்படுத்தப்பட்ட, சேமித்து வைக்கப்பட்ட உணவு வகைகள் சந்தையில் அதிகரித்து வருகின்றன. விற்பனை செய்பவர்களும் விளம்பரத்திற்கென இருமடங்கு செலவு செய்கின்றனர்.வலிய திணிக்கப்படும் விளம்பரங்களால் வாங்குபவர்களும் பலமடங்காகி வருகின்றனர். நடுத்தர நகரக் குடும்பங்களிலுள்ள குறிப்பாக இளம் வயதினர் பெரிதும் விரும்புவது பிசா, பர்கர், பிரஞ்ச் ஃபிரை, நூடுல்ஸ், சீஸ் பர்கர், டாக்கோஸ், உப்பிடப் பட்ட வறுவல்கள், மில்க் ஷேக் போன்ற இத்தகைய உணவு மற்றும் கார்பனேட்டட் பான வகைகளையே. மேம்போக்காகக் கூறுமிடத்து இவ்வுணவு வகைகளில் அதிக கலோரிகள் கொண்ட அதே நேரம் ஆரோக்கியத்திற்கு அவசியமான வைட்டமின்கள், நார்பொருட்கள், தாதுஉப்புக்கள், புரதம் போன்ற ஊட்டப் பொருட்கள் குறைந்த அல்லது அற்ற நிலையிலேயே உள்ளன.

இவ்வகை உணவுப்பொருட்களில் அதிக அளவில்... சர்க்கரை, சோடியம்.... அல்லாது கொழுப்பு மிகுதியாக உள்ளன. இவை அல்லாது செயற்கையான (additives) கூட்டுப் பொருட்கள்,மோனோ சோடியம் குளூட்டமேட் மற்றும் நிறமேற்ற (colouring) பயன்படும் வேதிப்பொருட்கள் உள்ளன. இவ்வகை உணவுப்பொருட்கள் கீழ்காணும் வழிகளில் உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன என்பது உங்களில் எத்தனை பேருக்குத்தெரியும் ?

பொன்மொழிகளில் சில

1. ஏழைகள் ஜோதிடரையும், பணக்காரர்கள் டாக்டரையும் விடமாட்டார்கள்.
2. நல்ல நண்பர்கள் கடவுள் கொடுத்த பரிசு. நல்ல பெற்றோர்கள் பரிசாக வந்த கடவுள்கள்.
3. பணத்தினால் முடியாதது பரிவினால் முடியும். பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் கிடைத்துவிடும்.

குறள் நெறி !

லெஷ்மி, சரஸ்வதி இவர்களிடையே யார் உயர்ந்தவர் என்ற போட்டி ஏற்பட்டது.

சரஸ்வதியின் அருளைப் பெரும் பலர் உண்பதற்குக்கூட வழியின்றி வறுமையில் வாடுகின்றனர், ஆனால் எனது அருள்பெற்றவன் படிப்பறிவு இல்லாவிட்டால்கூட மகிழ்வாக வாழ்வான்என்றாள் லெஷ்மி தேவி.

இதனைக்கேட்ட சரஸ்வதி தேவி சிறிதும் படிப்பறிவில்லாத ஒருவனுக்கு அருளாசி வழங்கினாள். அவனோ நல்ல செல்வந்தனாகி பணம், நகை, மாடு, மனை, என சகல வசதிகளையும் பெற்றான் மாடமாளிகையில் உலாவச் சென்றவன் இங்கிருந்து வீதியை எட்டிப்பார்த்தால் எவ்வளவு சிறியதாக இருக்கிறதே இங்கிருந்து குதித்தால் எப்படியிருக்கும் என எண்ணினான்.

சரஸ்வதி தேவி லெஷ்மியிடம் பார்த்தாயா உன் அருள்பெற்றவன் கீழே குதித்தால் உயிர்போய்விடும் என்றுகூட அறியாதவனாக இருக்கிறானே! இவனை செல்வம் காப்பாற்றுமா ? என்றாள். நீ தோல்வியை ஒப்புக்கொண்டால் நான் அவனைக் காப்பாற்றுவேன் என்றாள் சரஸ்வதி. லெஷ்மியும் ஒப்புக்கொண்டாள். சரஸ்வதி அந்த பாமரனுக்கு அருள் தந்தாள். பாமரனும் மேலிருந்து குதித்தால் தன் உயிர் போய்விடுமே என எண்ணினான். குதிக்கவும் இல்லை.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை

செல்வம் மட்டும் போதாது.கல்வி அவசியம். நம்மை நல்வழிப்படுத்துவது நூலறிவு. நேர்வழியில் நடக்கவைப்பது பட்டறிவு, அறிவுதான் தலையாய செல்வம்.

சிரிப்பதற்கு சில

பையனின் ஆங்கிலக் கட்டுரைப் பரீட்சைக்காக தயார் செய்தார் அவனது அப்பா.

இதற்கென ஒரேயொரு கட்டுரையை மனப்பாடம் செய்துகொண்டால் எப்படிகேட்டாலும் சற்று மாற்றி எழுதி தப்பித்துக் கொள்ளலாம் என்ற குறுக்கு வழியையும் சொல்லிக் கொடுத்தார். இவன் மனப்பாடம் செய்திருந்த தலைப்பு எனது சிறந்த நண்பன். ஆனால் தேர்வில் கேட்ட கட்டுரையின் தலைப்பு என் தந்தை. பையன் கவலைப்படாது இப்படி எழுதினான். எனக்கு அனேக அப்பாக்கள் உண்டு. முரளிதான் எனது சிறந்த அப்பா. முரளி எங்கள் பக்கத்து வீட்டில் வசிக்கிறான். தினமும் என்னை சந்திக்கிறான்.

குற்றம் சொல்கிறார்கள் :

ஒரு கல்லூரி பேராசிரியர் தனது விடுதி சமையல் காரனை அழைத்து உன் சமையலைப் பற்றி மாணவர்கள் நிறைய குற்றம் சொல்கிறார்கள். மறுபடியும் குற்றம் சொல்வார்களேயானால் உன்னை வேலையிலிருந்து விலக்கிவிடுவேன்! என்றார். மாணவர்கள் சொல்லுவதை யெல்லாம் பொருட்படுத்தக்கூடாது எசமான் என்றான் சமையல்காரன். ஏன்? என்றார் பேராசிரியர். மாணவர்கள் என்னிடம்வந்து உங்கள் சொற்பொழிவைப் பற்றியும் இப்படித்தான் குற்றம் சொல்கிறார்கள் என்றான் சமையல்காரன்.

விடுகதைகள்.

1. பாயில் படுக்காமல் நோயில்லாமல் இளைக்கிறது. இது என்ன?
2. இரவும் பகலும் ஓய்வு இல்லை. அவன்படுத்தால் எழுப்ப ஆளில்லை. அவன் யார்?
3. வாலில் ஊசியுடன் திரியும் வம்பு டாக்டர். அவர்யார்?
4. சிறகில்லாத பறவை ஊரெல்லாம் சுற்றும். அது என்ன?
5. ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர்? என்ன நீர்?
6. ஓட்டை வாய் உள்ளவனுக்கு விழுந்த பல் முளைக்கவே இல்லை. இது என்ன?
7. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு. இது என்ன?
8. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை?
9. ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான். அவன் யார்?
10. கடித்தால் துவர்ப்பு, தண்ணீர்குடித்தால் இனிப்பு. இது என்ன?
11. தலைக்குக் கவசம். உயிருக்குப் பாதுகாப்பு. அது என்ன?
12. ஓசையிடுவான், உணவு சமைப்பான். அவன் யார்?
13. பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான். அவன் யார்?
14. சடக்கென்று வருவான், சத்தமிட்டுப் போவான். அவன் யார்?

சேகரியுங்கள் :

குற்றங்களின் மூலம் நியாயங்களைச் சேகரியுங்கள்.
தவறுகளின் மூலம் அனுபவத்தைச் சேகரியுங்கள்.
கர்மத்தின் மூலம் ஞானத்தை சேகரியுங்கள்.
நண்பர்களின்மூலம் புத்தியைச் சேகரியுங்கள்.

கல்வி:

கல்வியால் மட்டுமே மனிதன் மனிதனாக வளர முடியும். கல்வி மனிதனை எப்படி உருவாக்குகிறதோ அப்படியே அவன் வாழ்வு உருவாகிறது.

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094. தொலைபேசி : 044 24724882

100 1922-2022

அன்புடையீர் வணக்கம்.

சென்னை சூளைமேடு சௌராஷ்டிரா நகர், 10வது தெருவில் அமைந்துள்ள கார்காத்தார் இல்லத்தில் உள்ள 'B' பிளாக்கில் மகளிர் தங்கும் விடுதி 10.9.2024 முதல் செயல்படுகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறோம். வேலைக்கு செல்லும் மகளிர் மற்றும் கல்லூரியில் பயிலும் மகளிர் மாத வாடகையில் தங்குவதற்குரிய அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தேவையுள்ளவர்கள் மேற்படி முகவரியில் / 044-2472 4882 / 94454 82798 தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

சாதனை படைத்தவர்களில் சிலர்

ஜி.டி. நாயுடு

உலக அரங்கில் தமிழ்நாட்டை உயர்த்த நினைத்த அறிவியல் மேதை,உழைப்பின் சிகரம் ஜி.டி. நாயுடு பற்றி அறியாதோர் இருக்க முடியாது. அவர் ஒரு முறை பழைய இரும்பினை விலைக்கு வாங்கித் தம் மாணவர்களைக் கொண்டு உருவாக்கிய 32 பஸ்களை பள்ளிகளுக்கு இலவசமாக அளித்தார். இலவசமாக அளித்த பஸ்களுக்கு பதினைந்துலட்ச ரூபாய்வரி செலுத்துமாறு வருமான வரித்துறையினர் கேட்டனர்.இலவசமாக அளித்த பஸ்களுக்கு வரி செலுத்த மறுத்தார் என்பதற்காக அவரது வீட்டினை ஜப்தி செய்ய அரசு உத்தரவிட்டது. தன்மானம் கொண்ட விஞ்ஞானிக்கா வழி தெரியாது? மூளையைப் பயன் படுத்தினார்.தன் மனைவி பெயருக்கு அத்தனை சொத்துக்களையும் எழுதிவைத்தார்.மனைவியை பெயரளவில் விவாகரத்து செய்தார். அரசு நடவடிக்கைக்குத் திணறியது.

பிரதமர் லால் பகதூர்சாஸ்திரி



ஒரு முறை சாஸ்திரியின் நண்பர் ஒருவர் சாஸ்திரியிடம் ஐம்பது ரூபாயைக் கடனாகக்கேட்டார்.தன்னிடம் இல்லை என்றார் சாஸ்திரி. அங்கிருந்த மனைவி ஏதோ அவசரம் போலிருக்கிறது, பணத்தை அவருக்குக் கொடுங்களேன் என்றார். என்னிடம் இல்லை உன்னிடம் இருந்தால் கொடு என்றார் சாஸ்திரி. அதற்கு அவருடைய மனைவி உள்ளே சென்று ஐம்பது ரூபாயைக் கொண்டுவந்த கொடுத்தார். நண்பர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்றதும் சாஸ்திரி தன் மனைவியிடம் இந்த ஐம்பது ரூபாய் உனக்கு ஏது? என்று கேட்டார்.மாதாமாதம் நீங்கள் தரும் ஐம்பது ரூபாய் பணத்தில் பத்து ரூபாயை சேமித்து வைத்திருந்தேன். அந்த பணம்தான் இது என்றார். அடுத்தநாள் அலுவலகம் சென்ற சாஸ்திரி என் மனைவி நாற்பது ரூபாயிலேயே சிறப்பாகக் குடுத்தனம் நடத்துகிறார். இம்மாதத்திலிருந்து நாற்பது ரூபாய் மட்டுமே எனக்கு சம்பளமாகக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டுவந்தார்.

பகத்சிங்

சுதந்திர வீரன் பகத்சிங்கிற்கு மரண தண்டனை விதித்தது வெள்ளை ஏகாதிபத்தியம். சாவதற்கு முன் ஏதேனும் சொல்ல விரும்புகிறாயா? எனக்கேட்டு வாய்ப்பு தரப்பட்டபோது என்னை கிரிமினல் குற்றவாளி போல தூக்கில் போடாதே. எதிரியாக நினைத்து சுட்டுத்தள்ளு எனக் கேட்டான். எப்படியும் சாகப் போகிறாய் எப்படி செத்தால் என்ன ? என ஆங்கில அரசாங்கம் அலட்சியமாகக் கேட்டபோது தூக்கிலிட்டால் என்உயிர் பிரியும்போது என்தாய் மண்ணைத் தொடமுடியாதபடி உயரத்தில் அல்லவா இருக்க நேரிடும். ஆனால் என்னைத் துப்பாக்கியால் சுட்டால் செத்துவிழும்போதும் என்தாய் மண்ணைத் தழுவியே சாவேன் என்றான் தேச பக்தி பகத்சிங்.

ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்

நாம் வாழும் காலத்தில் வாழந்த மிகச்சிறந்த அறிவியல் அறிஞர் ஸ்டீபன் வில்லியம்ஹாக்கிங்.நியூட்டனுக்கு இணையான அறிவியல் அறிஞர். இவருக்கு 21வது வயதிலேயே திருமணத்திற்கு முன்பாக தசையூட்டமற்ற பக்கமரப்பு நோய் எனப்படும் இயக்கு மரபணு நோயால் தாக்குண்டார். குணப்படுத்த முடியாத இந் நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு படிப்படியாகக் கை,கால் முதலியன பாதிக்கப் பட்டு பேசும் திறனிழந்தார். உடல் நலிவுற்ற சமயம் அவரை பரிசோதித்த டாக்டர் அவர் தசை இறக்கநோயால் பாதிக்கப் பட்டுள்ளதாகக் கூறி விரைவில் மரணம் நேரிடும் என எச்சரித்தார். சற்றும் கலங்காத ஹாக்கிங் மேற்படிப்பைத் தொடர்ந்தார். படுத்தப் படுக்கையிலேயே இருந்தாலும் பேசும் கருவியை தானே தன் முயற்சியாலேயே வடிவமைத்து சாதனை படைத்தார். கணினியூடாகப் பேச்சுத்தொகுப்பி மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் சாதனத்தைத் தாமாகவே தோற்றுவித்தார். 2018மார்ச் 14ல்தான் காலமானார்.

சாதனை படையுங்கள்.

உலகில் கோடிக்கணக்கானோர் பிறக்கின்றனர், வாழ்கின்றனர், வாழ்ந்த சுவடே தெரியாது மறைந்து வருகின்றனர்.ஒருசிலர் மட்டுமே மறைந்தும் பல ஆண்டுகள், பலநூறு ஆண்டுகள் நம் மனதில் நீங்கா இடம் பெற்று அவர்தம் படைப்பினால் வாழ்கிறார்கள். திருவள்ளுவர் திருக்குறளில் வாழ்கிறார், ராஜ ராஜ சோழன் தஞ்சை பெருவுடையார் கோயிலில் வாழ்கிறார், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் வாழ்கிறார்,கம்பர் இராமாயணத்தில் வாழ்கிறார்.தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார பல்புகளில் வாழ்கிறார். மேலும் கூறிக்கொண்டே போகலாம்.

இவர்களது சாதனைகளே படைப்புகளாகி இவர்களை இன்றும் நிலைத்து வாழச் செய்திருக்கின்றன. சாதனை படைத்த இவர்கள் எடுத்த எடுப்பிலேயே வெற்றி பெற்று விடவில்லை. உணவின்றி, உறக்கமின்றி, போதிய வசதிகள் ஏதுமின்றி சாதனைகளை நிகழ்த்தினாலும் அவற்றை ஏற்றுக் கொள்பவர்கள் இல்லாது இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் முயற்சியில் ஈடுபட்டவர்களே வெற்றியாளர்கள் ஆனார்கள்.துன்பத்திற்கு ஒரே மாற்று மருந்தும் சாதனைதான். சரியான கொள்கைகளுக்காக உறுதியான முறையில் உழைக்க வேண்டும். எதிர்ப்பின்றி எதுவும் விளைவதில்லை. வெற்றி பெறாமல் ஓய்வதில்லை என்று முயற்சி செய்பவர்களுக்கு எதிர்ப்பினால் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. முயற்சியின் முனையை ஒடிப்பதற்கு பதிலாக முனையை கூராக்குபவனையே வெற்றி நெருங்குகிறது.சாணை தீட்டப்படாத கத்தி மழுங்கி விடுவதைப் போல எதிர்ப்பிற்கு உட்படாத நிலையில் செயலும் பயனற்றுப் போய்விடுகிறது. எதிர்ப்பினை சந்திக்கும்போதுதான் வலிமையும் திறனும் ஏற்படுகிறது. வலிமைக்கு உரம் ஊட்டும் ஆற்றலுக்கு எதிர்ப்பு அவசியமாகிறது.எதிர்ப்பிற்கு ஆளாகிய நபர்கள் நமக்கு முன் பிறந்து மறைந்திருக்கின்றனர்.

யானைக்குட்டியை சிறுவயதில் ஒரு கனமான இரும்புச்சங்கிலியால் பிணைத்துக் கட்டிப்போட்டிருப்பார்கள். யானைக்குட்டி அதிலிருந்து விடுபடுவதற்கு பலமுறை போராடிப் பார்க்கும்.முட்டி மோதி பயனில்லாததை பல நாட்கள் பலமுறை தோற்பதை அறிந்ததும் ஒரு கால கட்டத்தில் தன்னால் விடுபட முடியாது என்ற ஒரு முடிவுக்கு வந்து விடுகிறது.விடுவித்துக்கொள்ளும் முயற்சியை விட்டுவிடுகிறது. இப்போது அந்த யானை பல நூறு கிலோ எடை கொண்ட பிரம்மாண்டமான மலைபோல நிற்கிறது. அதன் கால்மீது ஒரு குச்சியை மட்டும் காவலாக வைத்துவிட்டாலும் அந்த யானை தப்பி ஓடுதற்கு முயற்சிப்பதே இல்லை.தன்னைக்கட்டி நிற்கவைத்திருப்பது ஒரு சாதாரண குச்சிதான்,லேசாக அசைந்தாலே அது விடுபட்டுவிடும் என்பது கூட அந்த யானைக்குத் தெரியவில்லை.நம்மில் பலர் இந்த யானைபோலவே இருக்கின்றோம்.

தமது திறமைகள் என்னென்ன? நம்மால் எதையெல்லாம் சாதிக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளாது மிகச்சாதாரணத் தடைகளுக் கெல்லாம்பயந்து,ஒதுங்கி நில்லாது அவற்றை உடைத்துக் கொண்டு வெளியே வருதல்வேண்டும். யானை பலம் கொண்ட நீங்கள் குச்சிகள்தான் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றன. என்பதனை அறிந்து அத்தடைகளை நீக்கி வெளி வருதல்வேண்டும்.சாதனை சிகரத்தை அடைய வேண்டுமாயின் பொறுமை, நிதானம். இவையல்லாது மனஉறுதி மிக மிக அவசியம். இவை எல்லாவற்றையும் விட தொடர்ந்து பல தோல்விகளும், ஏமாற்றங்களும்தான் சாதனைகளுக்கான படிக்கட்டுகள். தோல்வியின்றி சாதனை படைக்க இயலாது. தன் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அவமானங்களையும் தோல்விகளையும் உள்வாங்கிக் கொண்டு பயந்துவிடாது,வெட்கப்பட்டு ஒதுங்காது, அயர்ந்து துவண்டுவிடாது , ஏளனங்களுக்கு அஞ்சாது மீண்டும் மீண்டும் செய்யும் விடாமுயற்சி களால் சாதனை புரிபவர்களே வெற்றி பெறுகிறார்கள். இதற்கு கடின உழைப்பும் எதற்கும் உடனடியான பயன் கிடைக்கும் என எதிர்பாராதும் செயல் பட்டுள்ளனர். இவர்களின் மன உறுதியும் விடா முயற்சியும், பொறுமை, நிதானம் போன்றன யாவும் இணைந்து செயல்பட்டதன் விளைவாகவே பற்பல சாதனைகள் படைத்துள்ளனர், இச்சாதனை யாளர்கள் பற்றி நீங்கள் அறிதல் வேண்டும் சாதனையாளர்களாக நீங்கள் உயர்ந்திடவேண்டும் என்பதே ஆசிரியர் விருப்பம்.

விடுகதை விடைகள்.

1 .சந்திரன்	2. இதயம்	3. தேள்	4. தபால்
5. கண்ணீர்	6. சீப்பு	7. இரத்தம்	8. அழுகை	9. விமானம்
10. நெல்லிக்காய்	11. ஹெல்மெட்	12. குக்கர்.	13. தண்ணீர்	14. தும்மல்

மணமகன் / மணமகள் தேவை

பெயர் செல்வி N. சௌம்யா
படிப்பு B.E. (ECE)
வேலை Daimler, Chennai
Rs. 10.4 Lakhs/PA
பிறந்த தேதி 22.7.1995
உயரம் 167 cm
நட்சத்திரம் கார்த்திகை 2ம் பாதம்
கோத்திரம் கொத்தனுட
பூர்வீகம் கொத்தட்டை, திட்டக்குடி (Tk)
தகப்பனார் S. நடனசபாபதி
வேளாண்மைத் துறை (ஓய்வு)
தாயார் N. மீரா (குணிசிரமேடு, சிதம்பரம்)
முகவரி 109/170, காசு கடை தெரு,
சிதம்பரம் – 608 001.
Cell : 94437 88165, 86107 60403
விருப்பம் சமபடிப்பு, சென்னையில் பணிபுரியும் வரன், IT நிறுவனம்

பெயர் செல்வி C. கலைவாணி
படிப்பு B.Sc.,
வேலை கிளை மேலாளர்,
SBI கர்நாடகா
பிறந்த தேதி 04.03.1997
உயரம் 5' - 1"
நட்சத்திரம் மூலம் 1ஆம் பாதம்
கோத்திரம் குழவிட
பூர்வீகம் மணிக்கிராமம்
தகப்பனார் G. சந்திரசேகரன் பிள்ளை
தாயார் C. விஜயா (பெருந்தோட்டம்)
முகவரி 4/319E, செங்குன்று,
பாட்டவயல் (அ.நி),
நீலகிரி மாவட்டம் – 643 240.
Cell : 95970 26767, 95142 52525, 94422 68028
விருப்பம் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பணிபுரியும் வரன்.

பெயர் செல்வன் S. ரவீன் குமார்
படிப்பு M.Tech. VLSI
வேலை Senior Engineer (VLSI)
Multicoreware inc / Uhnder inc.
Rs. 22 Lakhs / PA
பிறந்த தேதி 21.11.1993
உயரம் 175cm
நட்சத்திரம் சதயம் 1ம் பாதம்
கோத்திரம் கனகராய
பூர்வீகம் திருநெல்வேலி
தகப்பனார் A. சங்கர், Director of School Education (Retd.)
தாயார் P. வசந்தி, Headmistress, Govt. Hrs. Sec. School (Retd.)
முகவரி 28 & 29, VGN Highness,
Vikramaditya Street, Srinivasapuram,
Iyyappanthangal, Chennai - 600 056.
Cell : 78459 14635, 86670 33721, 94447 48490
E-mail : spvrk1956@gmail.com
விருப்பம் பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள பொருத்தமான வரன்

மணமகன் தேவை

பெயர்	செல்வி **NIVEDHITHA**
படிப்பு	MCA,
வேலை	Associate Technical Consultant, ATC at WNS-Vuram, Chennai
பிறந்த தேதி	06.04.1999
உயரம்	5' - 6"
நட்சத்திரம்	Kettai
கோத்திரம்	Paguvuda
பூர்வீகம்	Mayiladuthurai
தகப்பனார்	**Senthilvelan** (Late)
தாயார்	**Lalitha** (Homemaker)
முகவரி	No. 2, South Street, Thiruindalur, Mayiladuthurai Cell : 75981 79139 / 98946 26139
விருப்பம்	சமபடிப்பு, ஏற்ற வரன்

பெயர்	செல்வி **S. சந்தியா**
படிப்பு	B.E. (ECE)
வேலை	SEO Executive, Excella Business Service, Chennai
பிறந்த தேதி	14.06.1999
உயரம்	5' - 2"
நட்சத்திரம்	திருவாதிரை
கோத்திரம்	இடையார்வுட
பூர்வீகம்	அத்தியூர்
தகப்பனார்	**R. சத்தியநாராயணன்,** (Finance)
தாயார்	**S. காந்திமதி,** காதி பவன் (மேலாளர்) செந்துறை
முகவரி	38/2, சிவன் சன்னதி தெரு, திட்டக்குடி, கடலூர் மாவட்டம். Cell : 75983 81081, 94427 81081

மணமகள் தேவை

பெயர் செல்வன் **க. விசாகன்**
படிப்பு B.Tech.,
வேலை CloudDevOps Consultant
Aspire Systems,
Chennai

பிறந்த தேதி 22.11.1995
உயரம் 178 cm
நட்சத்திரம் விசாகம் 3ஆம் பாதம்
கோத்திரம் கனகராய
தகப்பனார் **சு. கண்ணன்**
தாயார் **க. அஞ்சலி**
முகவரி சுதா ஸ்டுடியோ,
228, சிவாலய வணிக வளாகம்,
பெண்ணாடம் – 606 105.
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம்
Cell : 94430 79801

பெயர் செல்வன் **N. நவீன்ராஜ்**
படிப்பு B.E. (Mech.)
வேலை Tecnicas Reunidas,
Bangalore

பிறந்த தேதி 18.06.1997
நட்சத்திரம் அனுஷம் 1ம் பாதம்
கோத்திரம் வேணுட
பூர்வீகம் குறிச்சி
தகப்பனார் தெய்வத்திரு. **S. நடராஜன்**
(Ex. - Mangalam Theatre)
தாயார் **N. சித்ரா** (பாலக்குடி)
முகவரி 1/155, மெயின் ரோடு,
பரசலூர்,
செம்பனார்கோவில் (அஞ்சல்),
தரங்கை (Tk),
மயிலாடுதுறை மாவட்டம்
Cell : 93611 00794, 99413 74680

பெயர் செல்வன் **S. ஜோதி**
படிப்பு B.E. (EEE)
வேலை IT, CTS, OMR
Rs. 8.4 Lakhs/PA

பிறந்த தேதி 04.03.1994
உயரம் 177 cm
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் கொங்கராய
பூர்வீகம் T.V புதூர் (விருதாசலம்)
தகப்பனார் **C. சிவகுருநாதன்**
தாயார் **S. சந்திரா**
முகவரி 2/76, லட்சுமி விநாயகர் கோயில் தெரு,
காரபாக்கம்,
சென்னை – 600 097.
Cell : 99629 04490
விருப்பம் சென்னையில் பணிபுரியும் பெண்.
அல்லது பணிபுரிய விருப்பமுள்ள பெண்.

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 12 Lakhs / PA

பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

மணமகள் தேவை

பெயர் செல்வன் **V. பாலமுருகன்**
படிப்பு B.E., MBA.,
வேலை Junior Asst., HR & CE SSD, Govt. of Tamil Nadu
பிறந்த தேதி 24.07.1995
உயரம் 170 cm
நட்சத்திரம் மிருகசீர்ஷம்
கோத்திரம் செம்பதரிய
பூர்வீகம் கன்னியாகுடி
தகப்பனார் **G. வெங்கடேசன்,** HM
அரசு உதவி பெறும் பள்ளி, தருமபுரம்
தாயார் **B. சிவகாமசுந்தரி,** B.T. Asst.
அரசு பள்ளி வை.கோவில்
(வரவுகுடி)
முகவரி 5, செண்பகவள்ளித் தெரு, வை.கோவில்,
சீர்காழி (Tk), மயிலாடுதுறை மாவட்டம் – 609 117.
Cell : 94867 17955, 94887 49387
விருப்பம் அரசு பணியில் உள்ள வரன் / வங்கி / அஞ்சலகம் / Any Degree

பெயர் செல்வன் **V. ASHISH KUMAR**
படிப்பு B. Tech.,
வேலை Software Engineer, IT Firm, Bangalore
Rs. 55 Lakhs/PA
பிறந்த தேதி 28.01.1996
உயரம் 6'
நட்சத்திரம் பரணி
கோத்திரம் வங்காரமுட
பூர்வீகம் கீழநத்தம் (சிதம்பரம்)
தகப்பனார் **M. வாகீசன்,**
Ginni Filaments Ltd. Sr. Manager, New Delhi
தாயார் **V. விஜயபாரதி,** (Homemaker)
வீராணநல்லூர் (காட்டுமன்னார்குடி)
முகவரி 5A/190, 2nd Floor, Gali No. 8, WEA
Karol Bagh, New Delhi - 110 005.
Cell : 98733 24089
E-mail : bharathivasan74@gmail.com
விருப்பம் பொருத்தமான வரன்

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு குழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நங்கநல்லூர் :

18–8–2024 காலை 4.30 – 600 மணிக்கு புதிய சங்க கட்டிடத்தில் கணபதி ஹோமம் மற்றும் நவக்கிரக ஹோமம் நடத்தி முறையான கிரஹபிரவேசம் நடைபெற்றது. மகளிரணியினரது ஆன்மீக பாடலும் சிறப்பாக அமைந்திருந்தது. காலை நிகழ்வுக்கு கலந்து கொண்ட அன்பர்களுக்கு செயற்குழு உறுப்பினர் திரு. R. தில்லை கோவிந்தன் குடும்பத்தினரால் சுவையான இனிப்புடன் காலை உணவு பரிமாரப்பட்டது.

சங்க தலைவர் திரு. G. சரவணன் அவர்களது தலைமையில் மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. KKR. சுரேஷ் அவர்கள் முன்னிலை வகிக்க சங்க ஆலோசகர் திரு. T. இராஜசேகரன் வரவேற்புரை ஆற்றிட சென்னை ராதாஎன்ஜினியரிங்க ஓர்க்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. V.R. செந்தில்குமார் அவர்கள் சரியாக 10.00 மணிக்கு முறையாக சங்க கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். இந்த நிகழ்வில் அண்ணாநகர் முனைவர் கு. விவேகானந்தன் அவர்கள் சங்க ஆலோசகர் திரு. T.N. முத்துக்குமாரசாமி அவர்கள், கூட்டமைப்பின் அமைப்பு செயலாளர் திரு. கைலை. சண்முகம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியது வெகு சிறப்பு.

இறுதியாக சங்க செயலாளர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் இந்த இடம் அமைவதற்கு உறுதுணையாக இருந்த அத்துணை தொண்டுள்ளங்களுக்கும், சென்னை ராதா இன்ஜினியரிங் தலைவர் அவர்களுக்கும் தாராளமாக நிதி உதவி செய்த கார்குல சொந்தங்களுக்கும், சங்க நிர்வாகிகளுக்கும் மகளிரணியினருக்கும் நன்றி தெரிவித்த விதம் நெகிழ்ச்சியடைய செய்தது. ஒற்றுமையே உயர்வு தரும் என்பதற்கு இன்றைய நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டு என்பது மிகையல்ல.

மாநில கூட்டமைப்பின் தலைவரது சிறப்புரை எங்களுக்கு மிகுந்த ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்தது என்றால் மாற்று கருத்துக்கு இடமில்லை.

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் சங்க கட்டிட வளாகத்தில் 25–8–2024 அன்று மாலை 5.30 மணிக்கு தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

சங்க மூத்த உறுப்பினர் திருமதி. நிரஞ்சனா – கணேஷ் அவர்களது தந்தையார் திரு. மங்களம் பிள்ளை தாம்பரம் (பூர்வீகம் வீராணநல்லூர்) அவர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

செயலாளர் திரு. கோ. தியாகராஜன் அவர்களால் சென்ற மாதத்திய கூட்ட நிகழ்வுகளும், தொடர்ந்து இது நாள் வரையிலான சங்க முக்கிய நிகழ்வு செய்திகளும் செயலாளரால் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சங்க கட்டிடம் பத்திரப்பதிவு செய்து நம் வசமானது முதல் இன்று வரையில் கட்டிடத்துக்கும் திறப்பு விழா நிகழ்ச்சிக்கும் ஆன செலவு மற்றும் நன்கொடை வந்த விவரம் சங்க பொருளாளர் திரு. V. செல்வக்குமார் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு குழு ஏற்றுக்கொண்டது.

திறப்பு விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தொண்டுள்ளங்களுக்கும், இது நாள் வரை சங்கத்தின் மாதாந்திர கூட்டம் நடைபெற இடம் அளித்த சங்க தலைவர் திரு. G. சரவணன் அவர்களுக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. மேலும் செயலாளர் தனது சொந்த பொறுப்பில் அனைத்து ஆலோசகர்கள், நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும், மகளிரணியினருக்கும் சால்வை அணிவித்து அவரது மகிழ்வினை தெரிவித்துகொண்டார்கள்.

கட்டிடத்தின் பயன்பாடு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

சங்க இணைச்செயலாளர் திரு. S. மதிவாணன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

நமது சங்க கட்டிடத்தில் 22–09–2024 அன்று துணைத்தலைவர் திரு. கோ. சுவாமிநாதன்

அவர்களின் தலைமையில் இந்த மாத செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இறைவணக்கத்தை இணைந்து வழங்கியவர்கள் திருமதி. கலையரசி இராஜசேகரன் மற்றும் திருமதி. கிருஷ்ணகுமாரி வேணுகோபாலன். துணைத்தலைவர் திரு. கோ. சுவாமிநாதன் அனைவரையும் வரவேற்று பேசினார். நமது சங்க பொருளாளர் திரு. வை. செல்வகுமார் அவர்களது சிறிய தகப்பனார் சென்னை கே.கே. நகரில் வசித்து வந்த (புத்தகரம்) திரு. இரா. முருகேசம் பிள்ளை அவர்களின் மறைவிற்கும், உறுப்பினர் சுரேந்தர் (ஆதம்பாக்கம்) அவர்களின் தந்தை பொறியாளர் திரு. V. சுந்தரமூர்த்தி அவர்களின் மறைவிற்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் சென்றமாத அறிக்கையினை சமர்ப்பித்தார். தற்போதைய நிதி நிலவரம் பற்றிய விவரங்களை பொருளாளர் திரு. செல்வகுமார் அவர்கள் எடுத்துரைத்தார் பல்வேறு பொதுச்சேவைகளில் ஈடுபட்டு வரும் திருமதி. கலையரசி மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகிய இருவருக்கும் சேவை நிறுவனங்கள் மூலம் விருதுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து அவர்கள் இருவரையும் சங்கத்தின் சார்பில் பாராட்டி சால்வை அணிவித்து கவுரவிக்கப்பட்டது. அன்மையில் துணைச்செயலர் திரு. வெ. கண்ணன் அவர்களுக்கு Tambaram Civil Engineers Association சார்பில் Sir Visvesvaraya Award 2024 என்ற விருது வழங்கப்பட்டது. அவருக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு சங்க கட்டிடத்தில் கல்விக்கான வகுப்புகளை துவங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. வகுப்புகளை எடுக்க ஆர்வம் தெரிவித்த திரு. M.G. இளங்கோவன், M.Phil., அவர்களுக்கு அதனைப் பற்றிய சுருக்கமான விளக்கம் அளித்திட வாய்ப்பளிக்கப்பட்டது. நமது சங்க அலுவலகத்தில் சிறிய நூலகம் மற்றும் கார்குல வரன்களைப் பற்றிய தொகுப்புகளை வைப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மாநில சங்க தலைவர் திரு. KKR. சுரேஷ் அவர்களின் மணிவிழாவில் திரளாக கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர் திரு. A. வைத்தியநாதன் அவர்கள் சிற்றுண்டி வழங்கியமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர் திரு. கு. கோவிந்தராசு அவர்களது நன்றியுரைக்குப்பிறகு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- V. செல்வகுமார்,
பொருளாளர்.

அண்ணாநகர் :

சங்ககூட்டம்8–9–2024 அன்று அண்ணாநகரில் டாக்டர் கு. விவேகானந்தன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. சங்க உறுப்பினர் மெட்ரோஸோன் திரு. ஜி. கோவிந்தராஜ் – திருமதி. உமா அவர்களின் மகள் வர்ஷிணி – சபரி விஸ்வநாத் திருமணம் பாடி திருமலை திருப்பதி வசந்த மகாலில் 5–9–24 அன்று நடைபெற்றது. மணமக்களுக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் ஜி. கண்ணன் அவர்களின் மகள் ஹேமா – சந்தோஷ்குமார் திருமணம் 16–9–24 அன்று மயிலாடுதுறை வாசுகி மகாலில் நடைபெற இருக்கிறது. திருமணம் சிறப்பாக நடைபெறவும், மணமக்களுக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

2–10–24 காந்தி ஜெயந்தியன்று நடைபெற இருக்கும் சங்கத்தின் 17–ம் ஆண்டு நிறைவுவிழா சிறப்பாக நடத்த ஸ்டேஜ் கமிட்டி, ரிசப்ஷன் கமிட்டி, ஸ்போர்ட்ஸ் கமிட்டி, ஃபுட் கமிட்டி போன்றவை அமைக்கப்பட்டது. ஆண்டு விழா அழைப்பிதழ் 700 அடிக்கப்பட்டு உள்ளதாகவும் விரைவில் தபாலில் எல்லோருக்கும் அனுப்பப்பட உள்ளதாகவும் தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்கள். நிறைவாக திரு. ராஜசேகர் அவர்கள் நன்றியுரை சொல்ல கூட்டம் முடிவு பெற்றது. நன்றி!

என். ஆனந்தகணபதி, செயலாளர். 9094682811

குரோம்பேட்டை :

செயற்குழு கூட்டம் கடந்த 31–8–2024 சனிக்கிழமையன்று மாலை 6 மணி அளவில் தலைவர் திரு. சி. மனோகர் அவர்கள் தலைமையில் 4, பிரவின் பிளாட்ஸ், காந்தி தெரு, சிட்லபாக்கத்தில் நடைபெற்றது.

17–ஆம் ஆண்டு குரோம்பேட்டை மங்கல சந்திப்பையும் 18–ஆம் ஆண்டு விழாவையும் டிசம்பர் மாத இறுதியில் சிறப்பாக நடத்தவும் நெல்லை மேயராக தேர்வாகியுள்ள திரு. இராமகிருஷ்ணனுக்கு பாராட்டு தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குரோம்பேட்டை நெல்லையப்பர் அரங்கம் பெயர் பிரச்சனை தொடர்பாக மீண்டும் ஒரு வலியுறுத்தல் மற்றும் நினைவூட்டல் கடிதம் தமிழக அரசுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

– பா. தியாகராஜன்,
செயலர்.

குமராட்சி ஒன்றியம் :

சங்கத்தின் நாஞ்சலூர் கிளை 22–9–24 அன்று நமது சங்க கட்டிடத்தில் புதுப்பித்தல் விழா நடைபெற்றது. அவ்வமயம் கிளையில் 52 குடும்பத்தினர் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளார்கள்.

நாஞ்சலூர் கிளையில் அருகாமையில் உள்ள 1. C. வக்காரமாரி, 2. சிவாயம், 3. துரைப்பாடி, 4. பூலாமேடு மற்றும் 5. இளநாங்கூர் கிராமங்கள் உள்ளடக்கிய கிளை துவக்கப்பட்டது. கீழ்க்கண்டோர்கள் புதியப் பொறுப்பாளர்களாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் : திரு. A. பாலசுப்ரமணியம் பிள்ளை – சிவாயம், துணைத்தலைவர் : திரு. C. சந்திரசேகர் பிள்ளை – நாஞ்சலூர், செயலாளர் : திருமதி. ஆனந்தி – C. வக்காரமாரி, துணைச்செயலாளர் : திரு. சு. வெங்கடேசன் பிள்ளை – துரைப்பாடி, பொருளாளர் : திரு. சு. நடனசபாபதி பிள்ளை – இனநாங்கூர்

செயற்குழு உறுப்பினர்கள் : S. பாலமுருகன் – சிவாயம், R. அபர்ணா – N. பூலாமேடு, M. புனிதவதி – நாஞ்சலூர், செந்தமிழ் செல்வி – C. வக்காரமாரி, R. நிதர்ஷனா – N. பூலாமேடு

வரும் காலங்களில் ஒன்றிய சங்கத்தின் ஆணிவேர் மற்றும் கிளைவேர்கள் போல் இருந்து செயல்படுவோம் என உறுதி கூறினார்கள். மேலும் கார்காத்தார் 'ஒப்புரவு' பத்திரிக்கை சந்தா சேகரிப்பு பற்றியும் வலியுறுத்தி பேசினார்கள்.

ஒன்றிய பொருளாளர் திருமதி. R. திலகம் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவுற்றது.

– G. சிவராமன்,
தலைவர்.
9787068062

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 14–9–24 சனிக்கிழமை மாலை தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 2025–ஆம் ஆண்டிற்கான காலண்டர் அச்சிடுவது, சங்க கட்டிடத்தின் முதல், மற்றும் இரண்டாம் தளத்தை உறுப்பினர்களின் சுப காரியங்களுக்கு கொடுப்பது மற்றும் 28–9–24 அன்று அரியலூரில் நடைபெறும் மாநில கூட்டமைப்பு கூட்டத்தில் உறுப்பினர்கள் கலந்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் திரு. ரவிச்சந்திரன் பிள்ளை நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

திருவிடைக்கழி முருகன் கோயிலுக்கு சிதம்பரத்திலிருந்து பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்கு 20–9–24 அன்று, சீர்காழி கடைக்கண் விநாயக நல்லூர் எஸ்டேட் திருமண மண்டபத்தில், மேனாங்குடி பரமசிவம் பிள்ளை மற்றும் திருக்கருக்காவூர் சம்பந்தம்பிள்ளை குடும்பத்தினர்கள் ஏற்பாடு செய்திருந்த அன்னதான நிகழ்ச்சியில், சங்க உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு உதவிசெய்யப்பட்டது.

திருத்தம்

1) சென்ற மாதம் (ஆகஸ்டு 2024) வழங்கிய கல்வி உதவிதொகை, அமரர் திரு. Er. முத்துக்கிருஷ்ணன் பிள்ளை கிழாய், அவர்களின் வைப்பு நிதியிலிருந்து வரும் வட்டிதொகையில் Rs. 59,000 ஏழ்மை நிலையில் உள்ள மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டது.

வருந்துகிறோம்.

வைத்தீஸ்வரன் கோவில் (திருப்புங்கூர் பூர்வீகம்) வசிக்கும் திரு. முருகன் பிள்ளை அவர்களின் தகப்பனார் திரு. N. துரைராஜ் பிள்ளை அவர்கள் 20.9.24 அன்று இயற்கை எய்தினார்கள். அன்னாரின் இரண்டு கண்களும் அரவிந்த் கண் மருத்துவ மனைக்கு, வைதீஸ்வரன் கோயில் சென்ட்ரல் லயன் சங்கம் மூலமாக தானம் செய்யப்பட்டது.

சி. அகோரம்பிள்ளை,
செயலர்
94861 94228

இளந்தோப்பு :

சங்க கூட்டம் 17–09–2024 அன்று S. சீனுவாசன் அவர்கள் தலைமையில் சிவன் கோவிலில் துவங்கியது.

மண்டல செயலாளர் S. சீனுவாசன் அவர்கள் 15–09–2024 அன்று பிரமாண்டமாக கட்டி முடித்து கும்பாபிஷேகம் நடைபெற்ற அய்யனார் கோவில் திருப்பணிகளை வெகுவாக பாராட்டினார்கள்.

தலைவர் S.S.R. அவர்கள் அய்யனார் கோவில் கட்ட பெரும் பொருளுதவி செய்த அனைவரையும் வெகுவாக பாராட்டினார்கள்.

மற்றும் பொருளாளர் R. ஞானசேகரன் பிள்ளை முன்னாள் துணைத்தலைவர் S. சபாநாயகம் அவர்களும் கோயில் திருப்பணிகள் செய்தவர்களுக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

செயலாளர் தனது நன்றியுரையில் அய்யனார் கோவில் வேலைகளில் ஆரம்பம் முதல் நமது கார்குல

சொந்தங்கள் பங்கு பெற்று பெரும் பணி ஆற்றியமைக்கு நன்றி தெரிவித்தார்கள்.

மற்றும் தலைவர் S.S. ராஜேந்திரன் பொருளாளர் R. ஞானசேகரன் மற்றும் V. ராமமூர்த்தி பிள்ளை அவர்களுக்கு சால்வை அணிவித்து சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

செயலாளர் V. ராஜசேகரன் தனது உரையில் கோவில் திருப்பணிகளில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்தி கொண்ட மூவர்கள் தலைவர் S.S.R., பொருளாளர் R. ஞானசேகரன் மற்றும் கோவில் திருப்பணித்திலகம் V. இராமமூர்த்தியை வெகுவாக பாராட்டினார்கள்.

V. ராஜசேகரன், செயலாளர்.

94446 10907

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 15–09–24ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மணிக்கிராமம் சிவன் கோவிலில் பிரதோஷ வழிப்பாட்டுக்கு பிறகு சங்கத்தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்க செயலாளர் திரு. T. கபிலன் அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்ற ஆண்டு விழாவை மிக சிறப்பாக நடத்தி கொடுத்த கார்குல சொந்தங்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. புதிதாக தேர்வு செய்யப்பட்ட தலைவர், செயலாளர், பொருளர், ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மணிக்கிராமத்தை சேர்ந்த திரு. LM.D. சுந்தரமூர்த்தி அவர்கள் இறைவன் திருவடி சேர்ந்தமைக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. இறுதியில் பொருளரின் நன்றியுரைக்கு பின் கூட்டம் இனிதே முடிந்தது.

– G. அன்பழகன், தலைவர்.

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீளப்பெரும்பள்ளம் மற்றும் தலைச்சங்காடு சங்க கூட்டம் 05–09–2024 அன்று சங்கத் தலைவர் திரு. B. .இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் வரவேற்று பேசினார். ஆடி கடை வெள்ளிக்கு மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் தீமிதி திருவிழாவிற்கு நன்கொடையளித்து உடல் ஒத்துழைப்பு நல்கிய கார்குல உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு, பின்பு 'CREW TRUST' சென்னை மூலம் 2024 – 25 ஆம் கல்வியாண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற நான்கு விண்ணப்பங்கள் மாணவ / மாணவியரிடமிருந்து பெறப்பட்டு, பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்து அனுப்பி வைக்கப்பட்டதோடு நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுப்பெற்றது.

– B. இலட்சுமணன், தலைவர்.

9443783743

மயிலாடுதுறை

மயிலாடுதுறை நகர சங்க செப்டம்பர் மாத செயற்குழுகூட்டம்01–09–2024ஞாயிறு அன்றுதிரு.R. முருகானந்தம் தலைவர் (பொ) அவர்கள் தலைமையில், மகளிர் அணியினர் இறைவணக்கத்துடன் இனிதே ஆரம்பமானது. ஆகஸ்ட் மாத அறிக்கையை செயலர் (பொ) திரு. A. இராசேந்திரன் வாசிக்க, நிதி அறிக்கையை பொருளாளர் திரு. R. சந்திரசேகர் வாசித்து, நிதி அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டது. மகளிரணி சார்பில் செயலர் அறிக்கையை திருமதி. M. காயத்திரியும் நிதி அறிக்கையை பொருளாளர் திருமதி. சசிகலாவும் வாசித்தனர்.

நமது சமுதாயமாணவ, மாணவியர்க்கான கல்வி உதவித்தொகை நமது சமுதாய புரவலர்களிடமிருந்து பெறப்பெற்றது. கல்வி உதவித்தொகை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நமது சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துகொள்கிறோம்.

இந்த உதவித்தொகை பெற்றிட எங்களோடு தோலோடு தோல் நின்று உதவித்திட்ட திரு. G. முருகையன், திரு. P. சுவாமிநாதன், திரு. B. சுவாமிநாதன், திரு. G. சிங்காரவேலன், திரு. S. சண்முகப் பிள்ளை, திருமதி. சசிகலா திருநாவுக்கரசு ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கூட்ட முடிவில் இயற்கை எய்திய நமது சமுதாயம் சார்ந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. முத்துக்குமரசுவாமி நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– R. முருகானந்தம்,
தலைவர் (பொ), 9788858152

நகர கார்காத்த வேளாளர் சங்கம் மயிலாடுதுறை
2024 - 2025 ஆம் ஆண்டிற்கு உதவித்தொகை வழங்கிய புரவலர்கள்.

வ.எண்	பெயர் முகவரி	வழங்கிய தொகை
1	N. சம்பந்தம் பெட்ரோல் பங்க் – சித்தர்காடு	25000
2	T. சுகந்தநாதன் பிள்ளை தேவி அம்மாள் – கால்டாக்ஸ் பங்க்	2000
3	A. ஆக்கூர் பைன் ஆர்ஸ் – மயிலாடுதுறை	15000
4	க. பிகர் – சிதம்பரம்	10000
5	செந்தில் பைப்ஸ் – மயிலாடுதுறை	10000
6	Dr. ராஜசேகர் வைரம் கிளினிக் – மயிலாடுதுறை	10000
7	M. நடராஜன் Rted. Principal – பாலாஜிநகர்	10000
8	V. தியாகராஜன் B.A., B.L., அட்வகேட் – அருண்நகர்	10000
9	S. கந்தசாமி சித்ராசீவல் – சேந்தங்குடி	10000
10	N. ராமதாஸ் – சின்ன கண்ணாரத்தெரு	5000
11	Dr. V. முத்துராம் கிளினிக் – மயிலாடுதுறை	5000
12	முனைவர் R. செல்வநாயகம் – மதுரா நகர்	5000
13	G. திருநாவுக்கரசு – வலம்புரி நகர்	5000
14	P. செந்தில்குமார் – திருவிழந்தூர்	5000
15	D. பாஸ்கரன் – கம்பர் தெரு, சீனிவாசபுரம்	5000
16	Dr. G. மனோகரன் – திருவள்ளுவர் நகர், சீனிவாசபுரம்	5000
17	G. பால்சந்திரன் – நேருஜி தெரு, சீனிவாசபுரம்	5000
18	Dr. N. சிவக்குமார் – நாச்சிமுத்து நகர், மயிலாடுதுறை	5000
19	S. வேல் கண்ணன் V3 லேப்ஸ் – மயிலாடுதுறை	5000
20	M. திருநாவுக்கரசு – CKS நகர், மயிலாடுதுறை	5000
21	S. பானுமூர்த்தி – மயூரநாதகாலனி, மயிலாடுதுறை	5000
22	Dr. S. ராஜேஸ் கண்ணா – மயிலாடுதுறை	5000
23	பாரதி – நக்கீரர் தெரு, செம்பனார் கோவில்	5000
24	S. முத்துக்குமார் – காந்திநகர், மயிலாடுதுறை	4000
25	S. உமாபதி, YES GEE ஏஜென்சி – மயிலாடுதுறை	4000
26	K.S. ராஜி – மயிலாடுதுறை	3000
27	S. மோகன் – திருவிடைகழி	3000
28	G. அசோக்குமார் SBI Rted – குமரன் நகர்	3000
29	V. ஜெகன்நாதன் SBI Rted - குமரன் நகர்	3000
30	G. திருநாவுக்கரசு – சுப்பிரமணியபுரம்	3000
31	G. சிங்காரவேலு பாரதி நகர், சித்தர்காடு	3000
32	T. பன்னீர்செல்வம் – கம்பன் அச்சகம்	3000
33	R. நடராஜன் – திருமலை நகர்	3000
34	D. சுப்பிரமணியன் – சுந்தரேசன் நகர்	3000
35	Er. S. ராதாகிருஷ்ணன் – கம்பர் தெரு, சீனிவாசபுரம்	2500
36	R. கார்த்திகேயன் அட்வகேட் – பாரதி நகர்	2500
37	R. மீனாட்சி – திருப்பனந்தாள்	2000
38	M. வரதராஜன் – உளுத்துகுப்பை	2000
39	A. கோவிந்தராசு – சீனிவாசபுரம்	2000
40	B. செல்வராஜ் – நாச்சிமுத்து நகர்	2000
41	M. பாலசுப்பிரமணியன் – காமராசர் தெரு, சீனிவாசபுரம்	2000
42	S. திருஞானசம்மந்தம் – கம்பர் தெரு, சீனிவாசபுரம்	2000
43	R. இராமலிங்கம் – பாரதியார் நகர் – சித்தர்காடு	2000
44	R. சிவசுப்பிரமணியன் – பொய்யகுடி	2000

45	S. ஜெயம் – மயூரநாதர் மேலவீதி	2000
46	G. ரவிச்செல்வம் – ஒத்தத்தெரு	1500
47	P. சாமிநாதன் IOB Rted – சீனிவாசபுரம்	1000
48	சுகன்யா கார்த்திகேயன் – சென்னை	1000
49	K. வரதராஜன் – வலம்புரி நகர்	1000
50	C. தங்கபிரகாசம் – கூட்டுறவு நகர்	1000
51.	S. நடராஜன் – கூட்டுறவு நகர்	1000
52.	A. விஸ்வநாதன் – K.K.R. நகர்	1000
53	S. சரவணன் – K.K.R. நகர்	1000
54	P. இளம்வழுதி – மேலவீதி, திருவிழந்தூர்	1000
55	V. செந்தில் – பில்டெக் காலனி, திருவிழந்தூர்	1000
56	R. தியாகராஜன் – காந்தி நகர்	1000
57	R. தன்ராஜ் சித்ரா கேப்ஸ் – திருவிழந்தூர்	1000
58	S. வீரரெத்தினகுமார் – கரையான்தோப்பு	1000
59	V. தியாகராஜன் – ஞானாம்பிகை நகர்	1000
60	G. முருகையன் – மயூரநாதர் கீழவீதி	1000
61	G. கணேசன் Agri – ராஜா தெரு	1000
62	R. பாலசுப்பிரமணியன் – வடக்கு வீதி	1000
63	G. சுந்தரேசன் – நமச்சிவாயம் நகர்	1000
64	R. திருஞானசம்மந்தன் – பாரதியார் நகர்	1000
65	T. கனகசபை – காந்தி நகர்	1000
66	G. வரதராஜன் சுந்தரேசன் நகர்	1000
67	R. செல்வகுமார் – 5–ஆம் நம்பர் புதுத்தெரு	1000
68	D. பாலசுப்பிரமணியன் – ரோஜா தெரு	1000
69	C. மோகன் குமார் – கேசிங்கன் 8வது தெரு கிழக்கு	
70	R. சங்கர் – செண்பகதெரு, மயிலாடுதுறை	1000
71	R. தங்கம் – குறிஞ்சி தெரு	1000
72	V. திருநாவுக்கரசு – பெசண்ட் நகர்	1000
73	R. செல்வகணபதி – குறிஞ்சி தெரு	1000
74	M. அசோகன் – நேரு தெரு	1000
75	R. அருணாசலம் – செண்பகத் தெரு	1000
76	G. ராஜா – நெடுங்குளம் பழையார்	1000
77	R. முருகானந்தம் தலைவர் (பொ) – கூட்டுறவு நகர்	1000
78	A. இராஜேந்திரன் செயலர் (பொ) – கூட்டுறவு நகர்	1000
79	S. ஞானசேகரன் இணை செயலர் – தெற்குமடவிளாகம்	1000
80	R. சந்திரசேகரன் பொருளர் – சேந்தன்குடி	1000
81	K. சிவஞானம் வேதநாயகி – பாலாஜி நகர்	500
82	M. வரதராஜன் – K.K.R. நகர்	500
83	R. ஆனந்தன் – திருவள்ளுவர் நகர்	500
84	M. ராஜாமணி – கரையான்தோப்பு	500
85	G. மனோகரன் – பாரதியார் தெரு, சீனிவாசபுரம்	500
86	S. சோமசுந்தரம் – பாரதியார் தெரு, சீனிவாசபுரம்	500
87	P. சர்வேஷ்வரன் – சுப்பிரமணியபுரம்	500
88	K. வெங்கடாசலம் – சீனிவாசபுரம்	500
	மொத்தம்	ரூ. 287500

கல்வி உதவித்தொகை 2024–ல் வழங்கிய புரவலர்கள்.

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–09–2024 அன்று தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் அவர்களது இல்ல கூட்டமாக நடைப்பெற்றது. தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை தலைமையில் இறைவணக்கம் திருமதி. மு. ரத்னாவதி பாடிடவும் வரவேற்புரை தலைவர் அவர்கள் ஆற்றிடவும் சென்ற மாத கூட்ட அறிக்கை மு.ம. செயலாளர் கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும் வரவு – செலவு அறிக்கையை பொருளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. தலைவர் உரையில் மாநில சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது பற்றியும் தெளிவாக கூறினார்கள். மு.ம.செ. கோ. வடிவேலு பிள்ளை தமது உரையில் எப்போதும் செப்டம்பர் மாத கூட்டம் திரு. K. ராமநாதன் பிள்ளை வீட்டில் நடைபெறுவது வழக்கம். அது போல இந்த மாத கூட்டமானதும் அவர்கள் இல்லத்தில் அவரது மகன், மகள், துணைவியார் இந்த மாதத்தில் பிறந்ததை முன்னிட்டும் தலைவர் அவர்களுக்கு 60–வது ஆண்டு மணிவிழா நடைபெற்றது; மேலும் மருமகளுக்கு சீமந்தம் விழாவும் நடைபெற்றது. இதனை முன்னிட்டு இந்த மாதம் கூட்டம் அவர்களது இல்லத்தில் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்து கூட்டத்தை நடத்தியது பற்றி கூறினார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட மண்டலசெயலர் திரு. ராமசெல்வம் அவர்கள் செம்பனார் கோவில் சங்கம் போல் அனைத்து சங்கங்களும் மாதா மாதம் கூட்டம் நடத்த வேண்டும் என்றும் அதற்கு ஏற்பாடு செய்ய போவதாகவும் கூறினார்கள். திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் தமது உரையில் திருக்குறளில் கற்றல் பற்றி வள்ளுவர் கூறியதை எடுத்துரைத்தார்கள். மூத்த உறுப்பினர் திரு. V. வாசன் அவர்கள் கூறுகையில் நன்னிலம் மதுவனீஸ்வரர் கோயிலுக்கு சென்று வந்தது பற்றியும் முழு முதல் கடவுள் சிவன்தான் என்றும் மனிதர்கள் அனைவரும் ஆத்மா என்றும் சிவன் மட்டுமே பரமாத்மா என்றும் கூறி ஆத்மாவிற்கு அழிவில்லை என்றும் கூறினார்கள். மேலும் மு.மா.து. தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் தமது உரையில் செம்பனார் கோவில் பகுதியில் அமைந்துள்ள குமரக்கோயில், விநாயகர் கோவில், பெருமாள் கோயில் ஆகிய மூன்று கோயிலுக்கும் ஒரே நாளில் அதாவது 15–9–2024 அன்று சிறப்பாக குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளது பற்றியும் அதற்கான அழைப்பிதழை சங்கத்தில் காண்பித்து அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். மேலும் கூட்டம் நடத்தும் தலைவர் அவர்களது பாரம்பரியம் பற்றி கூறினார்கள். தலைவர் அவர்கள் ஒசூர் சங்கம் 25–ம் ஆண்டு விழாவினை முன்னிட்டும் சங்கத்திற்கு புதிய கட்டிடம் கட்டபடவுள்ளது பற்றியும் தெரிவித்தார்கள். சங்க கூட்டத்திற்கு அதிகமாக இளைஞர்கள் வர வேண்டும் என்றும் நமது சங்கத்திற்கும் ஆண்டு விழா நடத்தலாம் என்றும் கூறினார்கள். கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. திரு. N. ரவிச்சந்திரன் (ஓய்வு பெற்ற BDO) நன்றி கூறிட கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

பரசலூர் :

01–09–2024 அன்று சங்க கூட்டம் பரசலூர் பிரதான சாலை ராமு நகர் S. செந்தில்குமார் – S. அகிலா இல்லத்தில் திரு. க. கோவிந்தராசன் பிள்ளை தலைமையில் S. அகிலா இறைவணக்கம் பாட S. செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது

சென்ற மாத அறிக்கையை செயலர் வீ. கண்ணன், மாதாந்திர நிதிய அறிக்கையை பொருளர் S.M. விஜய், மு.அ. நிதிய அறிக்கையை தலைவர் க. கோவிந்தராசன் பிள்ளை வாசிக்க, நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்காக உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

பரசலூர் அருள்மிகு. பாலாம்பிகை (எ) இளங்கொம்பனையாள் உடனுறை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகத்திற்கு கலந்து கொள்வதற்காக பாதயாத்திரையாக வருகை புரிந்த தருமபுரம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு பரசலூர் எல்லையில் பூரண கும்ப மரியாதைகொடுக்கப்பட்டுமாலைஅணிவிக்கப்பட்டது. பரசலூர் சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

30–8–24 வெள்ளிக்கிழமை நடந்த மஹா கும்பாபிஷேக பெரும் விழாவில் திரிவேணி சங்கமம்,

கங்கை, பிரம்மபுத்திரா, திருக்கயிலாய தீர்த்தம், தலைக்காவிரி, சரயு, பூரணா நதி தீர்த்தங்கள் சேகரிக்கப்பட்டு பரசலூர் சங்கத்தின் சார்பாக தலைவர், செயலர், பொருளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து தருமபுரம் ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

ஆறு கால யாகசாலை பணிகள் மற்றும் மகா ருத்ர யாகம், திருக்கல்யாண நிகழ்வுகள், அன்று இரவு பஞ்சமூர்த்தி வீதி உலா நிகழ்வுகளில் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தருமபுர ஆதினம் நட்சத்திர குருமணி அவர்கள் சங்கப் பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து அருளாசி வழங்கினார்கள்.

கூட்டத்தில் பரசலூர் கும்பாபிஷேகத்தில் சிறப்பாக பணியாற்றிய செயலர் வீ. கண்ணன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்தார்கள். கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காப்பி, காரம் வழங்கப்பட்டது. சிறப்பு குலுக்களில் ஆண்களுக்கான பரிசு M. சரவணன், பெண்களுக்கான பரிசு கோ. பானுமதிக்கும் முறையே S. செந்தில்குமார் அகிலா வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் S. செந்தில்குமார், அகிலாவிற்கு R. அமிர்தகணேசன், S. ரேணுகா தேவி சால்வை அணிவித்தனர்.

இராஜஇராஜன் தெரு T. இராமலிங்கம் பிள்ளை சகோதரர் பொறியாளர் சுந்தரமூர்த்தி, மற்றும் கருவாழக்கரை S. செந்தில்குமார் சகோதரர், S. நடராஜன் இயற்கை எய்தியதற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேராசிரியர் V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,

9894960438

80-இராதாநல்லூர்

சங்க கூட்டம் 8–9–2024 அன்று தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் இல்லத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் சங்க பொருளாளர் M. சீனிவாசன் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

28–9–2024 சனிக்கிழமை அன்று அரியலூரில் நடைபெற உள்ள நமது மாநில பொதுக்குழுவிற்கான அழைப்பை ஏற்று நமது சங்கத்திலிருந்து மூன்று பேர் கலந்துகொள்ள தீர்மானிக்கப்பட்டது. 36– ஆண்டு காலம் முதன்மை செயல் அலுவலராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ள சங்க செயற்குழு உறுப்பினர் திரு. Er. S. சண்முகம் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இராதாநல்லூர் வெள்ளாளர் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ பெரியவாரண பிள்ளையார் கோவில் விநாயகர் சதுர்த்தி அன்று ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ ஐயப்பன் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது

இளைஞர்அணி திரு. A. இரத்தினவேல் சுப்ரமணியன் M.E அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

T. முத்துக்குமரசாமி, தலைவர்.

9443645646

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் மற்றும் தலைச்சங்காடு சங்க கூட்டம் 05–09–2024 அன்று சங்கத் தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் வரவேற்று பேசினார். ஆடி கடை வெள்ளிக்கு மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ சீதளாதேவி மாரியம்மன் தீமிதி திருவிழாவிற்கு நன்கொடையளித்து உடல் ஒத்துழைப்பு நல்கிய கார்குல உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு, பின்பு 'CREW TRUST' சென்னை மூலம் 2024 – 25 ஆம் கல்வியாண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற நான்கு விண்ணப்பங்கள் மாணவ / மாணவியரிடமிருந்து பெறப்பட்டு, பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்து அனுப்பி வைக்கப்பட்டதோடு நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுப்பெற்றது.

– B. இலட்சுமணன், தலைவர்.

9443783743

மேலையூர் (பூம்புகார்)

சங்க கூட்டம் 01–09–24 அன்று செயலர் இல்லத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கியது. தலைவர் உரைக்குப்பின் முன்னாள் பொருளர் தி. ஜெயபாலன் புதிய பொருளராகப் பொறுப்பேற்றிருக்கும், திரு. R. வெங்கடேசனிடம், வரவு – செலவு கணக்கை

உறுப்பினர்கள் முன்படித்துக்காட்டி ஏற்பு பெற்ற பின், தலைவர் மற்றும் செயலர் முன்னிலையில் ஒப்படைத்தார்.

கடந்த கூட்டத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனையின் மூலம் சங்கத்திலுள்ள 80 வயது நிறைவடைந்த 15 மூத்தோருக்கு அவர்களின் பெயர், நட்சத்திரத்திற்குத் திருக்கடையூர் திருக்கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து மறுநாள் அவரவர் இல்லத்திற்கே சென்று பிரசாதம் கொடுத்து நூலாடை அணிவித்துப் பாராட்டி ஆசி பெற்றோம். அவர்களின் மகிழ்ச்சியில் பங்கேற்றுப் பரவசமடைந்தோம். அந்தத் தருணத்தில் மேலையூர், மேலத்தெருவிலுள்ள திரு. சொ. பாலசுப்ரமணியன் அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூபாய் 5000/– அளித்தது மறக்க முடியாத ஓர் இனிய அனுபவம். அவருக்கு சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

செப்டம்பர் மாதம் 6–ந் தேதி 51–ஆவது திருமண நாளை கொண்டாடவுள்ள முன்னாள் செயலர் தி. ஜெயபாலன் வழங்கிய தேனீர் விருந்திற்கு உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்து நன்றி தெரிவித்தனர். உறுப்பினர் R. நடராஜன் பிஸ்கட்டும் தேனீரும் வழங்கிட அவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பொருளர் R. வெங்கடேசனின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் நிறைவடைந்தது.

M. பரணீதரன்,
செயலர்.

கும்பகோணம்

சங்க கூட்டம் 8–9–2024 அன்று கே.பி.ஆர் நகர் பி. ராஜசேகர் – நீலா ராஜசேகர் தம்பதி அவர்கள் இல்லத்தில் தலைவர் டி.எம். வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் மாநில கார்காத்தார் கூட்டமைப்பு மண்டல துணைத்தலைவர் எஸ். விஜயகுமார் முன்னிலையில் நடைபெற்றது. இறைவணக்கம் திரு. ஆனந்தன் அவர்களால் வழங்கப்பட்டது. திரு. எம். பாலகுரு அவர்கள் வரவேற்புரை அளிக்க செயலாளர் எஸ். விஜயகுமார் அவர்கள் ஆண்டு அறிக்கையும், பொருளாளர் நிதிநிலை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்து அறிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நன்றியுரை துணைச்செயலாளர் எம். சாமிநாதன் அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பனந்தாள் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றும் எஸ். புகழேந்தி அவர்கள் தமிழக அரசின் நல்ல ஆசிரியர் விருது பெற்றமைக்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

கோகுல்ராஜ் சுபசக்தி தம்பதியர் மகள் சுபிக்ஷா வின் சலங்கை பூஜையில் பரதநாட்டியம் சிறப்பாக செய்தமைக்கு வாழ்த்து தெரிவித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தற்போது வசூலிக்கப்படும் ஆயுள் சந்தா ரூபாய் ஆயிரத்தோடு 500 ரூபாய் கூடுதலாக வசூலித்து ரூபாய் 1500 ஆக வசூலிக்கவும்,

ஏப்ரல் முதல் வாரம் நடைபெற உள்ள மங்கல சந்திப்புக்கு குழு அமைப்பது எனவும்,

மங்கல சந்திப்பு பதிவு கட்டணம் ரூபாய் 600 என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பொங்கல் விழா கொண்டாடுவதற்கு இடம் தேர்வு செய்ய குழு அமைக்கப்பட்டது.

நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் எம்.சி.எஸ். ஆர். சம்பந்தம் (கும்பகோணம் ஸ்ரீ அபிமுகேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் பரம்பரை அறங்காவலர், தரணி ஸ்ரீ பூதேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் பரம்பரை அறங்காவலர், நகர மேல்நிலைப்பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்) அவர்கள் 27–8–2024 அன்று இறைவனடி சேர்ந்தார்கள் அவர்களின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– எஸ். விஜயகுமார், செயலாளர்.

தஞ்சை

சங்க 39–வது ஆண்டு விழா தஞ்சை கோல்டன் ஜூபிலி ஹாலில் 22–09–2024 அன்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைக்கப்பட்டது. 106 பேர்கள் கலந்துக்கொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டு திரு. S. இராஜசேகர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள் சங்கத்தலைவர் திரு. K. தண்டாயுதபாணி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்கள். பின்னர் செயலாளர் திரு. S. மதியழகன் அவர்கள் ஆண்டறிக்கை வாசிக்க, பொருளாளர் திரு. R. சண்முகம் அவர்கள் 2023 – 24–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அவை அனைவராலும் ஒருமனதாக

ஏற்றுக்கொள்ளபட்டது. தொடர்ந்து மகளிரணி தலைவி திருமதி. லதாராஜசேகர் அவர்கள் மகளிரணி செயல்பாடுகள் குறித்து உரை நிகழ்த்தினார்கள். திரு. S. மோகன்குமார் காமதேனு டிரஸ்ட் குறித்தும் பேசினார்.

விழாவின் சிறப்பு விருந்தினர் திரு. மு. சிவகுருநாதன் அவர்கள் "இழந்ததை மீட்போம்" என்ற தலைப்பில் சிறந்த கருத்துக்களைத் தொகுத்து உரை நிகழ்த்தினார்கள். குழந்தைக்கல்வி சிறப்பாக உள்ள நாடே தலைசிறந்த நாடாகும். எடுத்துக்காட்டாக உலகின் சிறந்த மகிழ்ச்சியான நாடான பின்லாந்து குழந்தைக் கல்வித்துறையில் சிறந்து விளங்குவதை விளக்கிக்கூறினார்கள். மறந்து போன குழந்தை விளையாட்டுகளை நகைச்சுவையுடனும் மனது பிற்காலம் நோக்கி செல்லுமாறும் உரை நிகழ்த்தினார்கள். நமது குல பழங்கால உணவு முறைகள் மற்றும் ஆடை அணியும் முறைகளைக் கூறி அவை மறைந்ததாலேயே நாம் இன்று உடல் நலமிழந்து வாழ்வதையும், தொலைக்காட்சி மற்றும் செல்போன்கள் நம் வாழ்க்கையை புரட்டிப் போட்டிருப்பதையும், இவற்றிலிருந்து நாமும் மீண்டு நமது சந்ததியினரையும் மீட்கவேண்டுமென நயமுடனும் நகைச்சுவையுடனும் உரை நிகழ்த்தினார்கள். அன்னாருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் புத்தகம் பரிசு வழங்கப்பட்டது.

அனைத்து சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது. இவ்வாண்டுவிழாவை இவ்வாண்டு 80 வயதுநிரம்பிய திருமதி.கு.சிவயோகம் அம்மையாருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்யப்பட்டது. மேலும், பணி ஓய்வு பெற்ற திரு. S. சோமசுந்தரம், திரு. S. முத்துவேல், திரு. S. ராதாகிருஷ்ணன், திரு. R.S. நடராஜன் மற்றும் திருமதி. சு. குணசெல்வி ஆகியோருக்கும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

திரு. S. இராஜசேகர் அவர்கள் தஞ்சை கார்காத்தார் சங்கம் தொடங்கப்பட்ட முறையையும் முதன் முதலில் மகளிர் மாநாடு தஞ்சை சங்கம் நடத்தியதையும் விளக்கினார்கள். மகளிரணி சார்பாக திருமதி. R. குணசெல்வி அவர்கள் "மனம்" எனும் தலைப்பில் நாம் நம் மனதை தியானத்தின் மூலம் பிரபஞ்சத்துடன் இணைத்து நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கினார்கள்.

சங்கத்தலைவர் திரு. K. தண்டாயுதபாணி அவர்கள் வயது முதிர்வு காரணமாக பொறுப்பிலிருந்து ஓய்வு பெறுவதால் புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். நிர்வாகக்குழு உறுப்பினர்கள் 15 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களிலிருந்து அலுவலக பொறுப்பாளர்களும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

கௌரவ தலைவர் – திரு. S. இராஜசேகர், தலைவர் – திரு. S. ஜெயச்சந்திரன், துணைத்தலைவர் – திரு. S. மோகன்குமார் செயலாளர் – திரு. S. மதியழகன், துணைச்செயலாளர் – திரு. J. மனோகரன், பொருளாளர் – திரு. J. சண்முகம், துணை பொருளாளர் – திரு. S. கல்யாணகுமார், சங்க கௌரவ ஆலோசகர் – திரு. S. திருஞானசம்பந்தம்

நிறைவாக சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. S. பாலசுப்ரமணியன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்த நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

மதியம் 1.45 மணியளவில் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

S. மதியழகன்,
செயலாளர்.

ஈரோடு :

25–8–24 அன்று ஈரோடு மரகதம் அண்ணாமலை பள்ளியில் மாவட்ட செயற்குழு கூட்டம் திரு. ச. பூபதி மண்டல செயலாளர் முன்னிலையில் திரு. அ. தேவேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் திரு. அ. மதியழகன் கடந்த கால நிகழ்வுகளை பற்றி விளக்க உரையாற்றினார் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

24 – 25–ம் வருட சந்தா 8–9–24 ஞாயிறு முதல் செய்வதெனவும், 85 வயது முடிவடைந்த மூத்த உறுப்பினர்கள் 8–9–24 அன்றே கௌரவிப்பது எனவும், பொருளாளர் திரு. ர. ராம்குமார் சங்க கையிருப்பு தொகை ரூ. 1,00,000 யை வங்கி கணக்கில் டெப்பாசிட் செய்வது எனவும், மண்டல செயலாளர் திரு. ச. பூபதி விளக்கத்தினை ஏற்று மாநில மையத்திற்கு அறக்கட்டளை சந்தாவுடன் உறுப்பினர் படிவத்தை பூர்த்தி செய்து மாநில மையத்திற்கு வழங்குவது எனவும், பேமிலி ட்ரி (Family Tree) புத்தக வடிவத்தை உறுப்பினர் சரிபார்ப்பிற்கு காண்பிக்கப்பட்டு தகவல்கள் சரி பார்க்கப்பட்டு ஒப்புதல் பெறுவது எனவும், CREW அறக்கட்டளை விண்ணப்பித்தவர்களின் படிவத்தை செயற்குழு ஒப்புதலுடன் அனுப்புவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக கூட்டம் 6 மணியளவில் முடிவு பெற்றது. கூட்டத்திற்கு 10 பேர் கலந்து கொண்டார்கள். இறுதியாக D. குமார் இணைசெயலாளர் நன்றி கூறினார்.

செயற்குழுவிற்கு இடம் அளித்து சிற்றுண்டி ஏற்பாடு செய்த திரு. S. திருநாவுக்கரசு IFS அவர்களுக்கு செயற்குழு நன்றியுடன் நினைவு கூறப்பட்டது.

அ. மதியழகன்,
மாவட்ட செயலாளர்.

செந்துறை :

20–09–2024 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் செந்துறை கார்காத்தார் சங்கக் கூட்டம் மாநில துணைத்தலைவர் திரு. R. இரவீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு. S. ஜெயராமன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். மாநில துணைத்தலைவர் அவர்கள் பேசும்பொழுது, வருகின்ற 28–09–2024–ல் அரியலூரில் நடைபெறவுள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும், அதற்கு நமது ஒத்துழைப்பையும் கோரினார்.

இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. செந்துறையை சேர்ந்த முன்னாள் இராணுவவீரர் லேட் சண்முகசுந்தரம் பிள்ளை மகள் செல்வி. சாந்தி (மாற்றுத்திறனாளி) அவர்களுக்கு உதவித்தொகை Rs. 1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) அளித்த திருவல்லிக்கேணி Human Club International பொறுப்பாளர்களுக்கும், மற்றும் தந்தையை இழந்த செல்வி. பராசக்தி (B.Tech Final year) D/o திருமதி. மஞ்சுளா சேகர் அவர்களுக்கு கல்வி உதவித்தொகை Rs. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அளித்த 'மனித நேயர்' திரு. தி.நெ. முத்துக்குமரசாமி, கௌரவ ஆலோசகர், CREW அவர்களுக்கும், மேலும் இந்த உதவித் தொகைகளைப் பெற்றுத்தர பரிந்துரை செய்த நமது மாநிலத் தலைவர் திரு. Dr. KKR.K. சுரேஷ், 'ஆனந்தம் பவுண்டேஷன்' திரு. செல்வகுமார், மாநில துணைத்தலைவர் திரு. R. இரவீஸ்வரன் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

28–09–2024–ல் நடைபெறவுள்ள மாநில பொதுக்குழு கூட்டத்திற்கு Volunteers ஆக பணி புரிய நமது உறுப்பினர்களை அனுப்புவது,

அரியலூரில் நடைபெறவுள்ள மாநில பொதுக்குழுவில் கீழ்க்கண்டவற்றை எடுத்துரைத்தல் :

கல்லூரி படிக்கும் மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை அளிப்பது போல் +1 மற்றும் +2 (HSC) படிக்கும் மாணவ / மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை அளித்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தினருக்கு உதவியளித்தல், மடாலயத்தில் தற்போது நடைபெறும் கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்துதல் மற்றும் அதற்கான நிதி ஆதாரங்களை திரட்டுதல், உறுப்பினர் அனைவரிடமும், பூர்த்தி செய்யப்பட்ட உறுப்பினர் படிவங்களை துரிதமாக பெறுதல், அனைத்து உறுப்பினர்களிடமும் இந்த ஆண்டு சந்தாவை துரிதமாக வசூல் செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கம் பொருளாளர் திரு. அ. மணி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ச. ஜெயராமன்,
செயலாளர்

இராஜவல்லிபுரம் :

சங்கம் ஒன்பதாம் ஆண்டு விழா, பொதுக்குழு மற்றும்நிர்வாகிகள்தேர்வுநடுத்தெரு, R.S. பாலசுந்தரம் பிள்ளை இல்லத்தில் வைத்து 01–09–2024 அன்று தலைவர் A. திருஞானசம்பந்தம் பிள்ளை தலைமையில் திரு. C. இராமசுப்பிரமணியன் பிள்ளை திருநெல்வேலி கார்காத்தார் சங்கம் செயலாளர் முன்னிலையில் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திருநெல்வேலி மேயர் திரு. G. இராமகிருஷ்ணன்@ கிட்டு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். உறுப்பினர் சீவலப்பேரி கணேசன் பிள்ளை இறைவணக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. வருகை புரிந்த அனைவரையும் துணைத்தலைவர் R. சுப்புலெட்சுமி வரவேற்றார். ஆண்டறிக்கை செயலாளர் R.S. முருகன் பிள்ளை வாசித்தார். வரவு செலவு அறிக்கையை தலைவர் A. திருஞானசம்பந்தன் பிள்ளை தலைவர் உரையுடன் வாசித்தார். C. இராமசுப்பிரமணியன் பிள்ளை சிறப்பு உரையாற்றினார். திருநெல்வேலி மாநகராட்சி மேயர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் நமது சங்கத்தின் வளர்ச்சி குறித்தும், சமுதாய ஒற்றுமை குறித்தும் வாழ்த்துரையும் வழங்கினார்கள். நிர்வாகிகள் தேர்வில் தலைவராக R.S. முருகன் பிள்ளை அவர்களும், செயலாளராக G. சுப்பிரமணியன் பிள்ளை அவர்களும் பொருளாளராக A. சங்கரசுப்பிரமணிய பிள்ளை அவர்களும் மேலும் உபத்தலைவராக திருமதி. R.

சுப்புலெட்சுமி அவர்களும் இணைச்செயலாளர் திருமதி. V. அகிலா அவர்களும் நிர்வாக குழு உறுப்பினராக S. மாணிக்கவாசக பிள்ளை, திருமதி. M. பொன்னம்மாள் அவர்களும் மேயர் முன்னிலையில் போட்டியின்றி ஏகமனதாக அனைவர் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நமது சங்கத்தின் புதிய பொருளாளர். சங்கரசுப்பிரமணிய பிள்ளை வனபார்வதி குடும்பத்தார் இரவு சிற்றுண்டி சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர். N. பர்வதபாஞ்சாலி அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

– செயலாளர்

ஒசூர் கார்காத்த வெள்ளாளர் நல அறக்கட்டளை

ஒசூர் சங்கத்தின் முப்பெரும் விழா **கட்டிட திறப்பு விழா, வெள்ளி விழா, குடும்ப விழா** 15.09.2024 ஞாயிறன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

கட்டிட திறப்பு விழாவை முன்னிட்டு அதிகாலை 4:30 மணிக்கு கோ பூஜை, கணபதி ஹோமம், நவகிரக பூஜைகள், நாதஸ்வர இசை முழங்க நடைபெற்றது. அடுத்து புதிய கட்டிடத்தை மாநில தலைவர் டாக்டர். திரு. K.K.R. சுரேஷ் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

காலை சிற்றுண்டி அடுத்து சிறுவர் சிறுமியர்களுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. மகளிர்களுக்கும் பலவிதப் போட்டிகள் நடைபெற்றது.

மதிய விருந்துக்கு பின் மகளிர்கள் குத்துவிளக்கு ஏற்ற செல்வன் R. ஷரத் கீபோர்ட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து வாசிக்க செல்வி G. நிகிதா மற்றும் C. கோபிஷா வின் நாட்டிய நிகழ்ச்சி உடன் திரு. S. பிரகாஷ் அவர்கள் தலைமையில் விழா இனிதே துவங்கியது. திரு. S. ராமலிங்கம், திரு. G. சுந்தரபாண்டியன், திரு. R.T அரசமூர்த்தி அவர்கள் முன்னிலை வகித்தார்கள். திரு. M. மனோகர் வரவேற்புரை ஆற்ற, திரு. S. பிரகாஷ் அவர்கள் தலைமை உரை ஆற்றினார்கள்.

அடுத்து மாநிலத் தலைவர் டாக்டர். திரு. K.KR. சுரேஷ் அவர்கள் விழா மலர் வெளியிட முதல் பிரதியை திரு. V. இளவரசன், திரு. S. நடராஜன் திரு. R. ஜெயபால், திருமதி. செந்தமிழ்செல்வி பழனிவேல் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மாநில தலைவர் டாக்டர். திரு. K.K.R. சுரேஷ் அவர்கள் தனது வாழ்த்துரையில் ஒசூர் சங்க நிகழ்வை வாழ்த்தி பேசினார்கள். மேலும் CREW Chairman கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் நமக்கு செய்த நிதி உதவிகள், நலத்திட்டங்கள் பற்றி பேசினார்கள். CREW MD. திரு. V.R. செந்தில்குமார் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் வர இயலாததையும் தெரிவித்தார்கள் மா.பொ.செயலர் திரு. M. பாலசுப்ரமணியன் பிள்ளை அவர்கள் தனது வாழ்த்துரையில் ஒசூர் சங்க சிறப்பை பற்றியும் மற்றும் பல நிகழ்வுகளைப் பற்றியும் பேசினார்கள் மா.பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை அவர்கள் பெண்களின் பாதுகாப்பை பற்றி பேசினார்கள் மா.அ. செயலாளர் திரு.கைலை சண்முகம் பிள்ளை அவர்கள் ஒசூர் சங்கத்தை பாராட்டியும் மற்றும் ஒப்புரவு செயல்பாட்டினை பற்றியும் சென்னையில் ஆரம்பித்த மகளிர் விடுதியை பற்றியும் எடுத்துரைத்தார்கள்.

மு.பொ. செயலாளர். திரு. M.S.முத்தையா பிள்ளை அவர்கள் ஒசூர் சங்க செயல்பாட்டினை பாராட்டி பேசினார்கள் மாநில.து. தலைவர்கள் திரு. S. சண்முகம் பிள்ளை, திரு. G. தியாகராஜன் பிள்ளை, திரு. V. சிவராஜன் பிள்ளை, திரு. S. சங்கரபாகம் பிள்ளை, திரு. V. ரவீஸ்வரன் பிள்ளை, முன்னாள் துணைத் தலைவர். V. முனியப்பன் பிள்ளை, ம.செயலாளர் திரு. N. சிதம்பரநாதன் பிள்ளை, மற்றும் சென்னை சங்க மு.தலைவர் திரு. சிவகுமார் பிள்ளை அவர்களும், குமராட்சி சங்க தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை, திரு. தெய்வநாயகம் பிள்ளை அவர்களும் மற்றும் மு. ம. செயலாளர் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் வாழ்த்துரை வழங்கி விழாவை சிறப்பித்தார்கள்.

அடுத்ததாக சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்து விழாமலர் SHIELD மற்றும் நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

விழா குழுவினர்களான திரு. N. திருமகன், திரு. A.கணேஷ்லட்சுமணன், திரு.S.லெட்சுமிகாந்தன், திருமதி.சுதா முத்துக்குமரன், திரு.R.சீனிவாசன், திரு.K.ஷண்முகம், திரு.S. நடராஜன், திரு.R.மோகன் குமார் உள்ளிட்ட அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். போட்டிகளில் கலந்துகொண்ட சிறுவர், சிறுமியர்கள் மற்றும் மகளிர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

அடுத்து விழாவின் முத்தாய்ப்பாக முப்பெரும் விழாவை முன்னிட்டு ஒசூர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் விழாமலர், SHIELD மற்றும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

இறுதியில் செயலாளர் திரு. I. சிதம்பரம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

M. மனோகர்

நங்கநல்லூர் வட்டார கார்காத்தார் சமூக நலச் சங்கம் கட்டட திறப்பு விழா

நாள் : 18.08.2024

ஓசூர் கார்காத்த வெள்ளாளர் நல அறக்கட்டளை

ஓசூர்

11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01.11.1970

மறைவு
20.10.2013

திருமதி. **K. இலட்சுமி** (மணிக்கிராமம்)

புழுதிவாக்கம், சென்னை.

என்றென்றும் உன் நினைவில் வாழும்

தகப்பனார் : **M. நடேசன்**
(காவல்துறை ஆய்வாளர் ஓய்வு, மணிக்கிராமம்)

தாயார் : **N. இராஜேஸ்வரி,** மணிக்கிராமம்

சகோதர சகோதரிகள்

மற்றும்

உறவினர்கள்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் :
17–05–1964

மறைவு :
05–10–2020

தெய்வத்திருமதி. K. விமலா கண்ணன்

சிதம்பரம் நகர முன்னாள் கவுன்சிலர், தி.மு.க.

பாசத்தின் பிரமாண்டமே! அன்பின் ஆளுமையே!
பண்பே பயனே! அன்பே அறனே! ஓய்ந்து விட்ட ஒளி விளக்கே
எங்களின் சேவைகள் மறுத்து, தேவைகள் தீர்த்த தேவதையே!
எங்களுக்கு எல்லாம் எது பிடிக்கும் என அறிந்து உடனளிப்பாய்
உணவாகினும், உடையாகினும், எதுவாகினும்....
மரணத்தின் வலியில் நீங்கள் துடித்ததை விட
எங்களை இனி யார் காக்க என கலங்கியதே அதிகம்.
எல்லாம் முடிந்து ஆண்டுகள் உருண்டது இன்னும்
வாழுகிறீர்கள் எங்கள் இதயங்களில் என்றும் மறையாமல் .....
மீளாதுயருடன் என்றும் உங்கள் பிரிவால் வாடும்.

கணவர் : R. கண்ணன், Foreman (Rtd) TANGEDCO

20/8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம்.

மகள்: K. கவிதா வெங்கடேஷ் B.E.
மருமகன் : N. வெங்கடேஷ், B.E.,
தாம்பரம், சென்னை.

மகன் : S. சுதாகர் B.E., MBA.,
மருமகள் : B. சந்தியா சுதாகர், BBA., B.A. (Hindi)
பேத்தி: S. ஸ்ரீநிகா
கேளம்பாக்கம், சென்னை

மற்றும் **உறவினர்களும், நண்பர்களும்.**

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.06.1947

மறைவு
04.11.2019

தெய்வத்திரு. **அ. சுப்ரமணியன்,**
சுகாதார ஆய்வாளர் Gr.I (ஓய்வு)

எங்கள் வாழ்வின் வசந்தமாய் !!
உண்மையின் உருவமாய் !!
உழைப்பின் சிகரமாய் !!
எளிமையின் வடிவமாய் !!
நட்பின் இலக்கணமாய் !!
பாசத்தின் உச்சமாய் !!
அப்பா என்ற சொல்லுக்கு அர்த்தமாய் !!
வாழ்ந்து மறைந்த உங்கள் நினைவுகள் மட்டும் இன்று துணையாய் !!

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மனைவி : **S. லலிதா**

மகன் : **S. சுதாகர்,** B.E., MBA.,
AGM, CREW (P) Ltd., Siruseri

மருமகள் : **B. சந்தியா சுதாகர்,** BBA.,BA (Hindi)
TCS, Thuraipakkam

பேத்தி : **S. ஸ்ரீநிகா சுதாகர்**
செங்கண்மால், கேளம்பாக்கம், சென்னை

மகள் : **K. கவிதா வெங்கடேஷ்,** B.E.,
HCL Technologies, Shozlinganallur

மருமகன்: **N. வெங்கடேஷ்,** B.E.,
Renault Nissan, Oragadam
தாம்பரம், சென்னை.

மைத்துனர்கள் : **S. ராதா & சகோதரர்கள்**
3, கருவாழக்கரை மேலையூர்

இளவல் : **R.கண்ணன்,** சிதம்பரம்.

மற்றும் **உறவினர்களும் நண்பர்களும்**

30, பெருமாள் கோயில் சன்னதி தெரு, மடப்புரம், திருவாரூர் – 610 001.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
03–11–1956

மறைவு
08–09–2024

பூர்வீகம் கீழ்ப்பெரும்பள்ளம் (தரங்கம்பாடி வட்டம்) தெய்வத்திரு சுந்தரேசன் பிள்ளை – நலமுடன் அலமேலு அம்மாள் அவர்களின் மூத்த மகனும், பாபநாசம் நெடுந்தெரு தெய்வத்திரு பிச்சை பிள்ளை – கல்யாணி அம்மாள் அவர்களின் மருமகனும், சென்னை போரூரில் வசித்து வரும் திருமதி P. சகுந்தலா அவர்களின் கணவரும் எனது தந்தையுமாகிய

சு. செந்தில்குமரன்

அவர்கள் 08–09–2024 அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

என்றும் தங்கள் நினைவில் வாழும்

மகன் – மருமகள்:
செ. சசிகுமார்
ச. நந்தினி
பா. ஹரிபிரசாத்

சகோதரர்கள்:
சு. சந்திரமோகன்
ச. ராஜலட்சுமி
சு. பால முருகன்
பா. லதா

பேத்தி: **ச. நிலாவினி**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
06.01.1937

மறைவு
15.09.2024

மயிலாடுதுறை மாவட்டம் புத்தகரம், தெய்வத்திருவாளர்கள் இராமசாமி பிள்ளை–நாகம்மாள் அவர்களின் இளைய புதல்வரும், கேசிங்கன் தெய்வத்திருமதி M.ஞானம் அவர்களின் கணவரும் எங்களது தந்தையாருமாகிய சென்னை – 600 078, K.K. நகர், 12வது செக்டார், 74வது தெருவைச் சேர்ந்த

திரு. **R. முருகேசன்** (Retd. Court Officer, Madras High Court) அவர்கள்

15.09.2024 ஞாயிற்றுக்கிழமை இரவு 10.15 மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது துயரத்தில் பங்கேற்ற அனைத்து நல்உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மகள்கள் – மருமகன்கŸ
S. சுமதி – K. சம்பூர்ண ஆனந்தன்
மயிலாடுதுறை
M. பாரதி – C. மகுடேசன்
சென்னை

மகன் – மருமகள்
M. அருள் பாபு
Impressions Inc. K.K. Nagar, Chennai.
Mobile : 98407 89325
லதா அருள்பாபு

பெயரன் – பெயர்த்திகள்
திருமதி. **தீபிகா சதீஷ்குமார்,** திரு. **R. சதீஷ்குமார்,** USA
திருமதி. **கல்யாணி ஹரிஹரன்,** திரு. **R. ஹரிஹரன்,** Chennai
செல்வி **AB. அனுவர்ஷா,** New Zealand, செல்வன் **AB. அகில்ஈஷ்வர்,** Chennai

கொள்ளுப்பெயரன்கள் – கொள்ளுப்பெயர்த்தி
S. பிரஹலாத், S. ருத்ரன், HK தீக்ஷா, HK ஆத்விக்,

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th October 2024

CHOZHA HOTELS

HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

We sincerely thank Mr. P.M. Subramanian, a renowned businessman of the J.P. Family, Thanjavur, for staying at our hotel with his family to celebrate their Bhima Ratha Shanti and blessing us with their presence..

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**